
செ. முத்துக்குமாரு
[illegible]வத்தை
சுன்னாகம்

# ஆத்ம ஜோதி



ஸ்ரீ முன்னேஸ்வரத்தில்
வடிவாம்பிகா தேவிக்கு
ஸ்ரீ லலிதாசகஸ்ரநாம
கோடி அர்ச்சனை
பெறுகிறது.

இடை
வந்துளேன்;
பெறற்கரும் பே
கண்ணாரப் பற்பல
காதாரப் பற்பல




# ஆத்ம ஜோதி

[ ஓர் ஆத்மீக மாத வெளியீடு ]


எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

— சுத்தானந்தர்


ஜோதி 14 || பிலவ ஞூ தை மீ 1ந்உ (14-1-62) || சுடர் 3


## பொருளடக்கம்


1 கீதாஞ்சலி ... 81
2 ஸ்ரீ லலிதா பஞ்சரத்தினம் ... 83
3 கோடி அர்ச்சனை ... 87
4 கண்டு களிக்க வாராயோ? ... 89
5 ஆன்மா கடவுளே! ... 90
6 தெய்வீக வாழ்க்கை ... 92
7 "புல்லாகிப் பூடாய்ப்.........? ... 94
9 நவக்கிரகமாலை ... 104
10 அறிஞரில் அறிஞன் (80ம் பக்கத் தொடர்ச்சி) ... 110
11 எனது ஐரோப்பிய யாத்திரை அநுபவங்கள் (முன்தொடர்ச்சி) ... 113
12 நாம தேவரது உவமை நயம் ... 119



## ஆத்மஜோதி சந்தா விபரம்

சந்தா ரூ. 75-00 வருடச் சந்தா ரூ. 3-00

தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர்:- க. இரா

பதிப்பாசிரியர்:- நா. முத்

ஆத்ம ஜோதி நிலையம் நா


மகாகவி தாகூரின்

# கீதாஞ்சலி

## 15. பெறும் பேறு!

பண்ணி சைத்துனைப் பாடிப் பரவுதற்
கெண்ணி வந்த இவ் வேழையை ஏற்க, இவ்
வண்ண மாமணி மண்டபத் துள்ளொரு
சின்ன மூலையிற் சேய்க்குமுண் டோரிடம்!

செழுமை யற்றுளம் தேயத்திடும் பாடலால்
அழுத ரற்றி அலைகுவ தல்லது
வளமி லாயிவ் வரண்ட உயிர், பிற
தொழில் அறிந்தில தொல்லுல கத்திலே!

ஆழ்ந்த நள்ளிருள் ஆலயத் துள், உனை
நேர்ந்து பூசை நிகழ்ந்திடும் வேளை, யான்
சாந்தி பொங்குநின் சந்நிதி நின்று, நின்
பூந்த ளிர்ப்புகழ் பாடப் புரிகுவாய்!

காலைக் கன்னி, மென் காற்றினிற் பொன்மணி
யாழ் மிழற்றும் இனிய நல் வேளையில்,
சில நின்முன் திகழ்ந்திடக் கட்டளை
ஏழைக் கிட்டருள்; யான்பெறும் பேறிதே!

## 16. வேளை வந்ததோ?

அம்புவி யாம், நின் அழகுக் கோயிலுள்
இன்பத் திருவிழா; யானும்இங் கிதற்கு
வந்துளேன்; என்னுயிர் வாழ்வில் இஃதொரு
பெறற்கரும் பேறே! பெருவிழா இதனில்,
கண்ணுரப் பற்பல கண்டு மகிழ்ந்தேன்;
காதாரப் பற்பல கேட்டுக் களித்தேன்!

வீணை இசைப்பதே விழாவில்என் வேலை;
இயன்ற வரையில் இசைத்துவிட் டேன்யான்!
இனியேனும், உட்புகுந் தினியநின் முகத்தைக்
கண்கருத் துவக்கக் காணக் கிடைக்குமோ?
மௌனமாய் உன்னை வழிபடும் வேளை
வந்ததோ? இன்னும் வரவே இல்லையோ?

## 17. காத்திருக்கிறேன்!

அன்பால் முதிர்ச்சி யடைந்தபின் பே,அவன்
இன்பக் கரங்களில் எனையொப் படைப்பேன்!
நீளப் பிழைகள் நிகழ்ந்துள திதனுல்,
காலம் பற்பல கடந்துள; எனினும்,
கனிவதற் கெனவே காத்திருக் கின்றேன்!

மனிதர் பல் லோர்,தம் மரபெனப் போற்றும்
சாதி, சமய, சாத்திர, கோத்திர,
நீதி, நியம நெறிபற் பலவுட்
பிணித்திடற் கென்னைப் பெரும்பாடு பட்டனர்;
தனித்ததை விலகியான் தப்பியே வந்துளேன்;
அன்பால் முதிர்ச்சி யடைந்தபின் பரமன்
இன்பக் கரங்களில் எனையொப் படைக்கவே!

கண்டவ ரென்னைக் கவலையற் றவனென
விண்டுரைத் தேசுதல் வீண்பழி மொழியல;
எழுந்தஅக் கூற்றிங் கியாவும் உண்மையே!
கலைந்தது சந்தை; ஒழிந்தன வேலைகள்;
வந்தவர் அனைவரும் வாய்க்குவந் தபடி
நிந்தித் தென்னை நீங்கினர் வெகுண்டே!
அன்பால் முதிர்ச்சி யடைந்தபின் பே,அவன்
இன்பக் கரங்களில் எனையொப் படைக்கக்
கால மெல்லாம் காத்திருக் கின்றேன்!

— *''பரமஹம்சதாசன்''*



# ஸ்ரீலலிதா பஞ்சரத்னம்

**ஆசிரியர்**

*சைவந்தழைக்கவும், நமது நாடு செழிக்கவும் உலகம் அமைதி யுற்று வாழவும் வேண்டுமென்ற நன்னோக்குடன், முன்னேச்சுவரம் ஸ்ரீவடிவாம்பிகை அம்பாள் சந்நிதானத்தில் நடந்துவரும் கோடி அர்ச்சனையைப்பற்றி நமது வாசகர்கள் நன்கறிவார்கள். அநேகர் அந்தப் புனிதமான வழிபாட்டுக் காட்சியைக் கண்டும், அங்கே தினசரி சமர்ப்பிக்கப்படும் லட்ச அர்ச்சனையைக் கேட்டும் இன்புறுகிறார்கள்.*

*தேவி வழிபாட்டின் தொன்மையைப் பற்றியும், ஸ்ரீசக்கர பூஜையின் மகிமையைப் பற்றியும் ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாமத்தின் தனிச் சிறப்பைக் குறித்தும், ஆத்மஜோதியில் இதற்குமுன் விபரமாய் எழுதியுள்ளோம். அவற்றைப்பற்றித் திரும்பவும் நீண்ட கட்டுரை எழுத வேண்டியதேவையில்லை.*

*வேத உபநிடத உண்மைகளை தமது சொந்த அநுபூதியில் உணர்ந்து, அவற்றிற்கெல்லாம் அருமையான விரிவுரை அருளிய ஆதி சங்கரர், அந்த உண்மைகளுக்கெல்லாம் அப்பாலுள்ள தேவியின் சொரூபக் காட்சியைப் பெறுவதோ அதன் அழகை விளக்குவதோ இலகுவான காரியமல்லவென மிகவும் அடக்கமாய்க் கூறியிருப்பதிலிருந்தே தேவி வழிபாட்டின் மகத்துவத்தை நாம் உய்த்துணரலாம். அவர் கருத்துக்களையே பெரிதுந் தழுவி தமிழில் தேவி தோத்திரம் (அந்தாதி) பாடிய அபிராமி பட்டர்,*

"துணையுந் தொழுந் தெய்வமும் பெற்றதாயுஞ்
சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும்
பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குச
முங்கையில்
அணையுந் திரிபுர சுந்தரியாவ
தறிந்தனமே''

*என ஆதிபராசக்தியை மிகவும் அருமையான முறையில் வர்ணித்துள்ளார். அதாவது, தேவியே வேதமாய கற்பகதருவின் வடிவுகொண்டு தன்மகிமையை நமக்கு அறிவுறுத்துகிறாளாம். பரந்துவிரிந்த கிளைகளாக விருந்து அடியார்களுக்கு அருளுவதோடு, அக்கிளைகளின் உச்சியில், வேதங்களின் ஞான பாகமான உபநிடதங்களையே ஞானக் கொழுந்*

தாக வடிவுகொண்டு மிளிர்கிறாளாம். அத்தோடு வெளிக்குத் தெரியாமல் மறைந்து பதிந்திருக்கும் பிரணவமான வேர் குறிப்பதும் அவளையே என்கிறார்.

தேவி வழிபாட்டில் ஈடுபடுவோர்க்குப் பெரும்பயன் தரக்கூடிய பல தோத்திரப் பாடல்களை வடமொழியில் சங்கரர் அருளியுள்ளார். ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்திரத்திற்கும் அவர் ஓர் பாஷ்யம் வரைந்து, அதன்மூலம் அந்தத் தோத்திரத்தின் மகிமையை நமக்கு வற்புறுத்தியுள்ளார். அவர் அருளிய தோத்திரப் பாடல்களுள், அதிகாலையில் நாம் நம் சாதனைக்கு எளிதில் கையாளக் கூடிய சிறுநூல் ஸ்ரீலலிதா பஞ்சரத்னம். அன்பர்களின் நித்திய பாராயணத்திற்குப் பிரயோசனமாகும் வண்ணம் அப்பாடல்களைத் தமிழ் பொழிப்புரையுடன் கீழே தருகின்றோம்;-

ப்ராத: ஸ்மராமி லலிதா — வதனாரவிந்தம்
    பிம்பாதரம் ப்ருதுல - மௌக்திக - சோபி - நாஸம்
ஆகர்ண - தீர்க்க - நயனம் மணி - குண்டலாட்யம்
    மந்தஸ்மிதம் ம்ருகமதோஜ்ஜ்வல பால - தேசம் 1

பொழிப்புரை;— கோவைப்பழம் போன்ற சிவந்த உதடுகளையும், முத்து மூக்குத்தியின் பிரகாசம் பொருந்திய மூக்கையும், காதளவு ஓடிய நீண்ட கண்களையும், செம்மணிகள் குயிற்றிய குண்டலங்கள் அணிந்த காதுகளையும், கஸ்தூரிப் பொட்டிடப் பெற்ற நெற்றியையும் புன்சிரிப்பையுமுடைய ஸ்ரீலலிதாதேவியின் திருமுகமான தாமரையை அதிகாலையில் எழுந்ததும் தியானிக்கிறேன்.

ப்ராதர் - பஜாமி லலிதா - புஜ - கல்பவல்லீம்
    ரத்னாங்குலீய - லஸதங்குலீ - பல்லவாட்யாம்
மாணிக்ய - ஹேம - வலயாங்கத - சோபமானாம்
    புண்ட்ரேக்ஷு - சாப - குஷுமேஷு - ஸ்ருணீந்ததானாம் 2

பொழிப்புரை;— கரும்புவில், பஞ்சபாணங்களாய பூக்கள், பாசக் கயிறு இவற்றைத் தாங்கி, மாணிக்கக் கற்கள் பதித்த கைவளையல்களாலும், தோள்வளையல்களாலும் ஒளிபெற்று, செம்பொன் மோதிரங்கள் ஒளிவீசும் விரல்களாகிய செந்தளிர்களால் செழித்து விளங்கும் நான்கு கிளைகளை உடையதாய ஸ்ரீ லலிதா என்னும் கற்பகக் கொடியை அதிகாலையில் தோத்திரஞ் செய்கின்றேன்.

ப்ராதர் - நமாமி லலிதா - சரணாரவிந்தம்
    பக்தேஷ்ட - தான - நிரதம் பவ - சிந்து போதம்



பத்மாஸனாதி - ஸுரநாயக - பூஜநீயம்
    பத்மாங்குச - த்வஜ — ஸுதர்சன — லாஞ்சனாட்யம் 3

பொழிப்புரை;— பக்தர்கள் கோரிய வரத்தை அளிப்பதில் இன்புறுவதும், பவக் கடலைத் தாண்டிச் செல்லப் புணையாக உதவுவதும் பிரமதேவன் முதலான தேவர்களால் பூஜித்து முத்தி பெறற்குரியதும், தாமரை, கொடி, சக்கரம் ஆகியவற்றை ரேகை வடிவில் கொண்டு விளங்குவதுமான, ஸ்ரீலலிதா தேவியின் திருவடித்தாமரையை அதிகாலையில் வணங்குகின்றேன்.

ப்ராதஸ்துவே பரசிவாம் லலிதாம் பவானீம்
    த்ரய்யந்த — வேத்ய — விபவாம் கருணானவத்யாம்
விச்வஸ்ய ஸ்ருஷ்டி — விலய ஸ்திதி — ஹேது - பூதாம்
    விச்வேச்வரீம் நிகம - வாங் — மனஸாதிதூராம் 4

பொழிப்புரை:- வேதவாக்கிற்கும் வேதபுருஷனின் மனதிற்கும் எட்டாதவள் என்று பெயர் பெற்ற போதிலும், வேதங்களின் சிறந்த பாகமான உபநிடதங்களில் ஒருவாறு விளங்கக் கூடியவளும், எல்லாவற்றையும் படைத்து, நிலைபெறச் செய்து, லயமடையச் செய்பவளும், பவதேவர் என்றழைக்கப்படும் பரமேசுவரனுடைய பத்தினியாய் விளங்குபவளும், கருணாமூர்த்தியும் சர்வ மங்கள சொரூபியுமான ஸ்ரீ லலிதா தேவியை அதிகாலையில் எழுந்து போற்றுகிறேன்.

ப்ராதர் - வதாமி லலிதே தவ புண்யநாம
    காமேச்வரீதி கமலேதி மஹேச்வரீதி
ஸ்ரீசாம்பவீதி ஜகதாம் ஜனனீ பரேதி
    வாக்தேவதேதி வசஸா த்ரிபுரேச்வரீதி 5

பொழிப்புரை- இவ்வாறு அதிகாலையில் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் வழிபட்டபின், ஸ்ரீலலிதாதேவியே! உன்னையே யான் சர்வேச்வரியாகவும், சரஸ்வதிதேவிக்கும் இலக்குமிதேவிக்கும் ஈச்வரியாகவும், லோகமாதாவாகவும், முப்புரங்களை எரித்த முக்கண்ணனின் தேவியான திரிபுரசுந்தரியாகவும், எனது வாக்கின் தேவியாகவும், சர்வமங்களப் பொருளாகவும் வணங்கி உன் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

ய: ச்லோக - பஞ்சக — மிதம் லலிதாம்பிகாயா:
    ஸௌபாக்யதம் ஸுலலிதம் படதி ப்ரபாதே
தஸ்மை ததாதி லலிதா ஜடிதி — ப்ரஸன்னா
    வித்யாம் ச்ரியம் விமல—ஸௌக்ய—மனந்த— கீர்த்திம் 6

பொழிப்புரை:- எவனொருவன் சகல ஐஸ்வரியங்களை அளிப்பதும், அழகிய இனிய சொற்களால் அமைந்ததுமான இந்த ஐந்து சுலோகங்களை அதிகாலையில் எழுந்து பாடித் துதிக்கின்றானோ, அவனுக்குமுன் ஸ்ரீ லலிதா தேவியான ஸ்ரீமாதா உடனே புன்முறுவலோடு தோன்றிக் காட்சியளித்து, நல்லறிவு, செல்வம், அளவற்ற இன்பம், அழிவற்ற புகழ் ஆகிய சகலத்தையும் அருளுகிறாள்.


பக்திக்கு அடுத்தது சுத்தம்!

சுத்தம் சுகம் தரும்!




தயாரிப்பாளர்கள்:-

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

527, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.




# கோடி அர்ச்சனை

"பாவங்கள் மலியும்போதுஅப்பாவங்களை நீக்கி அறத்தை நிலைநாட்டுவதற்காகப் பூவுலகிற்கு நான் வருகிறேன்" என்பது கீதையிலுள்ள ஒரு வாக்கியமாகும். மக்கள் தீராத கஷ்டங்களுக்குள்ளாகும்போது மனதைத் திறந்து மனதோடுபட ஆண்டவன் உதவியைக் கோருகிறார்கள். வேண்டுவார் வேண்டுவதே ஈயும் பெருமான் அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றப் பூவுலகிற்கு ஓடோடியும் வருகின்றான்.

பெப்ரவரி மாதம் 3, 4 5 ஆகிய மூன்று தினங்களிலும் 8 கிரகங்கள் ஒன்று சேருகின்றன. அதற்கு முன்னும் பின்னும் உலகில் பல கேடுகள் மலியும் என்பது ஆன்றோர் கொள்கை. அதனை ஆண்டவனைப் பக்தி செய்தலால் நீக்கலாம் என்பதும் ஆன்றோர் தமது வாழ்வில் காட்டிப் போந்த நெறியாகும். ஞானசம்பந்தப் பெருமானார் அதற்கு உதாரண புருஷராக விளங்குகின்றார். நாமும் அவர்கள் மரபிலே தோன்றி அவர்கள் காட்டிய வழியிலே நடப்பவர்களாதலால் சம்பந்தப் பெருமான் காட்டிய வழியிலே நின்று எமது கேடுகளை நீக்கிக் கொள்ள வேண்டியது முறையாகும்.

இதனை முன்னிட்டு ஆஸ்திகர்கள் யாவரும் தத்தமக்குரிய நெறியிலே நின்று வழிபாடுகள் பலவிதத்தில் ஆற்றுவதைக் காண்கின்றோம். சம்பந்தப் பெருமானார் ஓதிய கோளறுபதிகத்தைத் தினந்தோறும் ஓதுவோர் பலர். கோளறு பதிகம் லட்சக்கணக்கில் அச்சாகி இலவசவிநியோகம் நடப்பதைக் காண்கின்றோம். வேறு சிலர் யாக காரியங்களிலே ஈடுபட்டுத் தேவர்களைத் திருப்திப்படுத்தி கிரக சாந்தி செய்து கொள்ளுகின்றார்கள். இன்னும் வேறுசிலர் 108 தினங்களுக்கு நாளொன்றுக்கு லட்சார்ச்சனை வீதம் கோடி அர்ச்சனை செய்கின்றார்கள். இத்தகைய பணியில் தேவ கைங்கரியத்தில் முன்னேஸ்வரம் மற்றையோருக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது என்றால் அது மிகைப்படுத்திச் சொல்வதன்று. வடிவாம்பிகாதேவியை எழுந்தருளச் செய்து தேவியின் முன்னிலையில் இயந்திரத்திற்கு அர்ச்சனையும் விசேட பூஜையும் நடைபெறுங் காட்சி மக்கள் உள்ளத்தில் பரவசம் ஊட்டுந் தன்மையதாகும்.

ஒருவர் லலிதா சகஸ்ரநாமத்தை ஓத பதின்மர் இருந்து குங்குமத்தால் அர்ச்சனை செய்வது பார்க்கப் பார்க்கப் பேரானந்தம் தருவதாகும். ஒவ்வொரு சகஸ்ரநாம முடிவிலும் பதின்மரும் சேர்ந்து பஞ்சாலாத்தி எடுக்கும்போது அக்காட்சி உள்ளத்திற்குக் கொடுக்கும் ஆனந்தமே தனிப் பட்டதொன்றாகும். கிரகங்கள் ஒன்று சேர்வதன் மூலம் ஆண்டவனைப் பல வழிகளில் பக்தி செய்யும் வாய்ப்பை ஆண்டவன் எமக்கு அருளியுள்ளான். "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ

இதற்கு நாயகமே'' என மணிவாசகப் பெருமானுர் வேண்டியபடி எது நிகழ்ந்தாலும் அவன் சித்தமென்று அவனிலே பாரத்தைப் போட்டு விட்டு அவனை நினைந்து பக்தி செய்வதே நாம் செய்யக்கூடிய தொன்ருகும்.

பூகோள அமைப்பின்படி இலங்கைக்குரிய இராசியான மகரஇராசியில் இராகு தவிர்ந்த சூரியன் முதலாய எட்டுக் கிரகங்களும் ஓரிடத்திற் சேர்வதுடன் சூரிய கிரணமும் நிகழ இருப்பதால் சொலற்கரிய பல தீய பலன்கள் ஏற்படும். தொற்று நோய்கள் நாடெங்கும் காட்டுத் தீப்போல் பரவும். கொடிய பஞ்சப் பிணி மக்களை வாட்டும். சமயச் சண்டைகள் மேலோங்கும். சிலவிடங்களில் பெருமழை பெய்யும். பூமி நடுக்கங்கள் திடீரென நிகழும். சமுத்திரம் கோபாவேசத்தோடு கொந்தளித்து நாடு நகரங்களை அழிக்கும். அக்கினி, ஆயுதம், ஏவாயுதம் ஆகியவற்றினுல் ஜீவ கோடிகள் மாளும். தலைவர்களிடையிலும் பொது மக்களிடையிலும் கருத்து வேறுபாட்டால் உள்ளூர்க்கலகங்கள் கிளம்பும். தரை, கடல், ஆகாய ஊர்திகளால் ஜீவமோசம் ஏற்படும். மலைகள் சரிந்து விழும். எரிமலை வெடித்து அக்கினியைக் கக்கும். நதிகள் திசை மாறி ஓடும், பொது நலப்போர்வையில் சுயநலப்புலிகளின் சூழ்ச்சியாற் கலகங்கள் ஏற்படும். கடலிலும், தரையிலும் ஆகாயத்திலும் கோர யுத்தங்கள் ஏற்படும். கட்சித் தலைவர்கள், இராசதந்திரிகள் கல்விவிற்பன்னர் முதலியோர் அகாலமரணமடைவர். உணவு, உடை, உறைவிடம் ஆகியவை போதிய அளவு கிடைக்கப் பெருமல் மக்களிடையே மரணப் பேய் தலைவிரித்தாடும். பயிர்வகைகள் வாடிவதங்கிச் சேதமுறும். காலநிலையிற் சடுதியான மாற்றங்களேற்பட்டு சொலற்கரிய துன்பங்களேற்படும்.

ஆகவே இந்தச் சங்கடமான சமயத்தில் உலகம் யாவையும் படைத்துக் காத்தருளும் பரமகருணுநிதியாகும் அகில லோக நாயகனுகிய சிவ பெருமானையும் அகிலாண்ட கோடியீன்ற அன்னை பராசக்தியையும் சந்திப்போம்; மலர் சொரிவோம். புகழ்ந்து பாடுவோம். அவர் கமலத் தாளும் தோளும் சிந்திப்போம்.

**திருக்கோணமலையில் அ. இ. தி. ஜீ. ச. வெள்ளிவிழா ஜனவரி 19, 20, 21, தேதிகளில் நடைபெறும்.**

ஊர்வலம், லட்சார்ச்சனை, யாகம், இசை நிகழ்ச்சிகள் பேச்சுக்கள் முதலியன இடம்பெறும்.

வெளியூர் அன்பர்களுக்கு தங்க இட வசதியும் உணவு வசதியும் செய்து கொடுக்கப்படும்.

# கண்டு களிக்க வாராயோ?

(சோமலிங்கம்)

சுற்றும் உலகம் தனில் உன்னை
சுற்றி அலைந்து நான் தேடி
சற்றும் வேறு நினைவின்றி (த்)
தவித்தேன் உன்னை நான் காண
கற்றேன் உந்தன் வடிவத்தை (க்)
காணேன்; காணமுயற்சித்தேன்
நிற்பாய் எங்கும் என்ருர்கள்
நின்றேன் உன்னைக் காணவில்லை.

காட்டில் அலைந்தேன் மலை ஏறி (க்)
காண எண்ணி முயற்சித்தேன்
ஏட்டில் படித்தேன் இங்கெல்லாம்
இருப்பாய் என்று அவைகூற
ஓட்டித் திரிந்தேன் என் உடலை
உன்னைத் தேடி எந்நாளும்
நாட்டில் உள்ள ஆலயங்கள்
நாடிப்பார்த்தேன் நீ இல்லை.

கடவுள் என்பார் பலபேர்கள்
கண்ணன் என்பார் சிலபேர்கள்
இடர்கள் தீர்ப்பாய் என்ருர்கள்
எங்கும் இருப்பாய் என்ருர்கள்
சுடரே! உன்னை நான் தேடி (த்)
துரும்பாய் எங்கும் சுற்றுகிறேன்
படரும் சோதிப் பிளம்பே! நான்
பார்த்துக் களிக்க வாராயோ?

"பெற்றமனது பித்தென்பார்
பிள்ளைமனது கல்லென்பார்"
அற்பச் செயல்கள் பிள்ளைசெய்தால்
அம்மா பிள்ளையை மறப்பாளா?
பெற்றதாயும் தந்தையும் நீ!
பிள்ளை உனக்கு நானும்தான்
கற்ருேர் விரும்பும் கனிச்சுவையே!
கண்டு களிக்க வாராயோ?

# ஆன்மா கடவுளே

[ஸ்ரீ சுவாமி ராமதாசர்]

உண்மை எங்கும் வியாபிக்கிறது; அதுவே என் அன்புக்குரியது. உயிர்ச் சக்தி எல்லாப் பிராணிகளையும் பொருட்களையும் உயிர்ப்பூட்டுகிறது; அதுவே என் அன்புக்குரியது. இடையறாத மகிழ்ச்சி எல்லா விடயங்களின் இருதயங்களில் துடிக்கிறது; அதுவே என் அன்புக்குரியது. சக்தி எல்லா இயற்கையாற்றலையும் தொழிற்படுத்துகிறது; அதுவே என் அன்புக்குரியது. ஒளி முழு உலகையும் விளக்குகிறது; அதுவே என் அன்புக்குரியது. நித்திய அமைதி, தெரிகிற, கிரகிக்கப்பட்ட யாதையும் தெரிவித்து உயிர்ப்பிக்கிறது; அதுவே என் அன்புக்குரியது. ஓ! என்றும் உள்ள உண்மையே! நான் எப்படி உன்னை நேரே கண்டு வர்ணிப்பேன்.

நான் என் மௌனத்தினதும் என் பேச்சினதும் சாட்சியே. நான் மௌனமே; நான் பேச்சே. என்ன ஆச்சரியம்! இது மறை மெய்மை சார்ந்த அனுபவம் என்று நான் சொல்ல முடியுமோ? இறையனுபவம் வாதத்திலும் கூடிய ஆழமானதும் பலவற்றை யுட்கொண்டதுமாய் இருக்கிறது. அப்படியாயின் அது என்னை? அது விவரிக்க முடியாத இரகசியம்.

**கடவுளும் ஆன்மாவும்:** கடவுள் ஆன்மாவே, ஆன்மா கடவுளே. ஆன்மாவின் ஆடைகள் - எல்லா உடம்புகளும் உருவங்களும் கடவுளே. மூலாதாரமாய் சித்தும் சடமும் ஒன்றே. அசைவில் சித்தே சக்தி. இறுகிய சக்தியே சடம்.

உள்வெளி இருப்பென்றில்லை. தெய்வீக இருப்பே எல்லாவற்றிலும் எல்லாம். எல்லாக் காட்சிகளிலும் கருத்துக்களிலும் அது மாத்திரமே உள்ளது. அது, அவள் அல்லது அவன் - எல்லாம் என் அன்புக்குரியது — உண்மையே, கடவுளே. கடவுள் உருவுடையவருமே, உருவற்றவருமே. நான் அவரை அறிய முயன்று அவராகினேன். நான் அவரே — இந்த அனுபவத்தினால் என் ஒவ்வொரு எண்ணமும், உணர்ச்சியும் தெய்வீக ஊக்கம் பெறுகின்றது.



உயிர் பரந்த வெளியே. உயிர் காலமே. உயிர் காரணமின்றிய காரணமே. வெளி அனந்தம். காலம் நித்தியம். கடவுள் அனந்தமும் நித்தியமுமாகிய உயிரே, வெளி எல்லாப் பொருட்களையும் உட்கொண்டிருக்கிறது. நான் அப்படிப்பட்ட கடவுளே, அப்படிப்பட்ட உயிரே — கால, தேச, காரணமின்றியவனே. இது இட்டபடி நடக்கும் கற்பனையே. அது, நான் யாதாய் இருக்கிறேன், கடவுள் யாதாய் இருக்கிறார் என்பதைக் கண்டு பிடிப்பதற்கு வேகங் கொண்ட முயற்சியே.

நான் பேசும்பொழுது நான் பேசாதிருக்கிறேன். நான் நடக்கும் பொழுது நான் அசைவில்லாதிருக்கிறேன். நான் வேலை செய்யும்பொழுது நான் ஓய்ந்திருக்கிறேன். நான் உலகங்களை அசைக்கும் பொழுது நான் ஒன்றும் செய்வதில்லை. நான் அசையாத உண்மையாய் இருக்கையில் எல்லா இயக்கங்களும் என்னுடையவே. உண்மையாக நான் இருக்கிறேன், நான் இருக்கவில்லை. நான் இதை என் கடவுளுக்குப் பொருத்தலாமோ? நான் அவரே; நான் வேறொருவரும் அன்று.

இருப்பே கடவுள். இன்மையே கடவுள். ஞாபகமும் அவரே. மறதியும் அவரே. நானும் அவரே. நீயும் அவரே. நான் அவரைப் பார்க்கும் பொழுது நான் என்னையே பார்க்கிறேன். நான் எனக்கு முன்னால் தோற்றும்பொழுது அவரின் காட்சி எனக்குக் கிடைக்கிறது. நாங்கள் எப்படிக் கலந்திருக்கிறோம். அவரும் நானும்! நானும் அவரும் ஒன்று என்று ஏன் நிச்சயிக்கப்படாது.

---

மனிதன் தான் கருதுவதிலும் பார்க்க மேலானவன். அவன் நித்தியன். அழிவற்றவன். அவன் தேய்வின்றிய நிறைவான அறிவு, ஆனந்தம். அவன் ஒரு குறைபாடும் இல்லாதவன். அவன் ஆப்தகர்மன். அவன் தலைசிறந்த மிக மேலான உண்மை. —சிவானந்தர்.

# தெய்வீக வாழ்க்கை

[சுவாமி சிவானந்தர்]

இங்கே, இப்பொழுதே கடவுளையடையும் ஒரேயொரு இலக்குடனும் குறியுடனும் கடவுளின் பொருட்டு வாழும் வாழ்வென்று தெய்வீக வாழ்க்கை பொருள்படுகின்றது. அமைதியே கடவுள். பேரின்பமே கடவுள். அன்பே கடவுள். நிறைவே கடவுள். இவையெல்லாவற்றையும் நீ கடவுளிடம் மாத்திரமே நுகரலாம்.

யார் உண்மையில் நிலைத்திருக்கிறானோ, யாருடைய இருதயம் எல்லாப் பிராணிகளிடமும் அன்பால் நிரம்பப் பட்டிருக்கிறதோ அவனுக்குத் தியானம் இயற்கையாயும் முயற்சியின்றியதாயும் இருக்கிறது. தியானம் ஒருவனைக் கடவுளுடன் ஒன்றுபட்டுணரச் செய்கிறது. அவரின் இச்சைக்கிசைவாய் வாழ்ந்து அவரின் அருளை நுகரச் செய்கிறது. தியானம் மனிதனின் ஆன்மாவுக்கு உணவாய் இருக்கிறது. ஆகையால், தியானி. அதுவே தெய்வீக வாழ்க்கை.

அன்பிலும் பார்க்கச் சிறந்த சக்தி உலகத்தில் வேறு இல்லை. அன்பு தெய்வீகமானது. தெய்வீக மனிதனின் செயலில் அன்பு தானாய் வெளிப்படுகிறது. அன்புக்கு எதிரிகள் இல்லை. அன்பு எல்லாவுள்ளக் கிளர்ச்சிகளையும் உருமாற்றி மனிதனின் உள்ளத்தை உருமாற்றுகின்றது. இயற்கையான எதிரிகளும் எதார்த்த, தெய்வீக அன்பாகிய அகிம்சையில் நிலைத்திருக்கும் மனிதனின் முன்னிலையில் பகைமையைக் கைவிடுகிறார்கள் என்று யோக சூத்திரங்களின் ஆசிரியராகிய பதஞ்சலி மஹர்ஷி எமக்கு உறுதி கூறுகிறார். ஆகையால் பேரண்ட அன்பை வளர். அன்பும் கருணையுமான வாழ்வே தெய்வீக வாழ்க்கை.

தெய்வீக மனிதன், அமைதியான மனிதன். எந்த மனிதனுடைய உள்ளம் யாவருக்கும் சார்பாக நல்லெண்ணம் நிறைந்திருக்கிறதோ, எந்த மனிதன் இப்படியாகத் தெய்வீக வாழ்க்கை நடத்துகிறானோ — அவன் மாத்திரமே அமைதியும் நல்லெண்ணமும் பரப்ப முடியும். அமைதி பேச்சு மாத்திரத்தால் நிறுவ முடியுமாயின், அமைதி மகாநாடுகளாலும் உடன்பாடுகளாலும் நிறுவப்படக் கூடுமாயின் நாங்கள் அதைப் பண்டே பெற்றிருக்க வேண்டும்.



ஆகையால் உலகத்தில் எமக்குத் தேவைப்படுவது ஓர் ஆன்மீக விழிப்பே. மனிதன் தன்னுடைய சொந்த சிறப்பியல்புக்குவிழிப்பூட்டவேண்டும். அவன் தன்னுடையஓர்ந்தஅறிவை மங்கச் செய்து தன் நுண்ணறிவைத் தாறுமாறாக்கும் அஞ்ஞானமாகிய திரையைக் கழற்றுவதற்கு இயலச் செய்ய வேண்டும். மாயை ஏழ்மையான சீவனை மயக்குகிறது. ஆசை காட்டி இழுக்கிறது. அவள் அவனை மெய்மையை மறக்கச்செய்து பொய்மை மெய்மையானதென்று அவனைக் கருதச் செய்கிறாள். அவளின் ஆட்சியில் மனிதன் சாயையைப் பொருளாகவும், துன்பத்தை இன்பமாயும், துயரத்தை மகிழ்ச்சியாயும் தவறாய்க் கருதுகிறான். யார் கடவுளைத் தஞ்சம் அடைகிறானோ அவன் மாயையைக் கடக்கிறான். அவளின் பிடிகளிலிருந்து விடுவிக்கப்படுகிறான். ஆகையால் உண்மையை நாடுபவன் பிரார்த்தனை, ஜபம் கீர்த்தனை, சத்சங்கம் முதலியவற்றை மேற்கொள்கிறான். வழிபாட்டு வாழ்க்கையே தெய்வீக வாழ்க்கை. வழிபாட்டினால் மனிதன் தன்னையும் மற்றவர்களையும் உயர்த்துகிறான். அவன் மாத்திரமே சமூகத்தைச் சீர்திருத்தி அமைதியையும் நல்லெண்ணத்தையும் நிலை நாட்ட முடியும். உங்கள் அனைவரையும் கடவுள் ஆசீர்வதிப்பாராக!

---

# கொழும்பு விவேகானந்த சபையில் திருமுறை விழா

சிவநெறிகூறும் தொல்பெரும் சிறப்புமிக்க பன்னிரு திருமுறைகளையும், அவற்றினை அருளிய அருள் அடியார்களையும் போற்றிப் புகழுமுகமாகக் கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் எதிர்வரும் தைமாதம் 27-ம் 28-ம் 29-ம் (9, 10, 11—2—62) திகதிகளில் சபை மண்டபத்தில் திருமுறைவிழா நடைபெறும். இவ் விழாவில் தவப் பெருந்திரு குன்றக்குடி அடிகளார், கலைமகள் ஆசிரியர் கி.வா. ஜகந்நாதன், திருவாவடுதுறை ஆதீனத்து ஓதுவாமூர்த்திகள் போன்ற பெரியோர்கள் கலந்து கொள்வர். இவர்களுடன் ஈழத்துச் சைவப் பேரறிஞர் பலரும், இசைவாணர்களும் பங்குபற்றுவர். விழா பற்றிய விரிவான விபரங்கள் சில தினங்களில் தெரிவிக்கப்படும்.

கொழும்புக்கு வெளியேயிருந்து விழாவுக்கென வருவோர்களுக்கு உணவு, இடவசதிகள் செய்து கொடுக்கவும், ஒழுங்குகள் செய்யப் படுகின்றன.

# “ புல்லாகிப் பூடாய்ப் . . . . . . . . ”

(செல்வி கோமதி சுப்பையா)

“புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவ ராய்ச் செல்லாஅநின்றவித் தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்” என்றார் பிறவிகள் பல எடுத்திளைத்த ஆன்மாக்களில் ஒருவராகிய மணிவாசகனார். இது அத்தனையும்இறைவனையேநேருக்கு நேராகக் கண்டு, அவரையே தனக்கு குருவாக வந்தபோது அதனையும் ஏற்று, பின் அவரையே தனக்காக உழைக்கச் செய்து, மீரா ஆண்டாள் போன்று, இந்த உடலுடனேயே கடவுளுடன் இரண்டறக் கலந்து பேரின்பத்தை அடைந்தவர். முதல்தர மான ஆன்மாக்களில் ஒருவராகிய அவரே இப்படியானால், ஆணவம், கன்மம், மாயை முதலிய நீக்கரிய மலங்களால் பீடிக்கப்பட்டு அறிவெல்லாந் தடைப்பட்டு மாயை என்னும் அதல பாதாளத்துள் தலைகீழாக வீழ்ந்து கொண்டிருக்கும் நாமெல்லாம்.............. ......

இப்படியெல்லாம் பிறப்பதற்குரிய காரணத்தை உமாபதி சிவாசாரியார் தமது நூலாகிய திருவருட்பயனிலே விரிவாக விளக்கியிருக்கிறார்.

“விடிவாமளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து”

என்ற அவரது குறளிலே அவர் கூறுகிறார். மாயை வடிவாதி–மாயையினாலாகிய தனுகரண புவன போகங்கள், கன்மத்து வந்து-ஆன்மாக்களுடைய புண்ணிய பாவங்களுக்குத் தக்கவைகளாகத் தோன்றி, விடிவாம் அளவும் விளக்கனைய–விடியும் வரை இருளை ஒருவாறு நீக்கத்தக்க விளக்குப் போல, ஆன்மா சிவஞானமாகிய பேரொளியைப் பெறும் முத்தி நிலை வரையும் ஆணவ இருளை ஒருவாறு நீக்கத்தக்க அறிவைக்கொடுக்கும் கருவியாக நிற்கின்றன. தனு என்பது நம் உடம்பையும், கரணம் என்பது இந்திரியம் முதலிய புறக் கருவிகளையும், மனம் முதலிய உட்கருவிகளையும், புவனம் என்பது வசிக்கும் உலகத்தையும், போகம் என்பது அனுபவிக்கப்படும் பொருள்களையும் குறிக்கின்றன. நாம் எவ்வாறு வினை செய்கிறோமோ, அதற்குத் தக்க நாம் பிறவியை எடுப்போம்.



வினையை இரண்டாகப் பிரித்து ஒன்று பசுவினை மற்றது சிவவினை எனவும் வழங்குகிறது. பிற உயிர்களுக்குச் செய்யப்படும் வினை பசுவினை எனப்படுகிறது. சிவபெருமானின் பேரில் நாம் செய்யும் வினைகள் சிவவினை எனப் பெயர் பெறுகிறது. பிற உயிர்களுக்கு நன்மை செய்தல் பசுநல்வினை எனப்படும். ஈதல், வாய்மை, இரக்கம், பெரியாரைப்பேணல் முதலியன பசுநல்வினையிற் சில. பிற உயிர்களுக்குத் தீமை விளைத்தல் பசுத்தீவினை எனப்படும், சிவனடியாரை நிந்தை செய்தல், கொலை செய்தல், புலாலுண்ணல் களவு, செய்ந்நன்றி மறத்தல், வஞ்சனை, பொறாமை முதலியன பசுத்தீவினையிற் சில. இதே போன்று சிவவினையையும், சிவநல்வினை, சிவத்தீவினை என்றும் பாகுபடுத்தி உள்ளனர். இதிலே சிவநல்வினை சரியை, கிரியை, யோகம், முதலிய மூன்று மார்க்கங்கட்குட்பட்டு நடத்தலே. அந்த மார்க்கங்கட்குட்பட்டிருந்தும் அவற்றைச் செய்யா தொழிதல் சிவத்தீவினை,

மாயை நிறைந்த இவ்வுலகில் நாம், ஆணவம், கன்மம் மாயை, என்னும் இவற்றால் பீடிக்கப்பட்டு இருக்கும்போது நாம் அவைகள் செய்யத்தூண்டுவனவற்றையேசெய்கின்றோம் அவைகள் நம்மை ஆட்சிசெய்ய நாம் ஆணவத்தின் கீழ் அடி பணிந்து நிற்கின்றோம். அவற்றின் வலியால் இப்பிறவியில் செய்யப்பட்டு அநுபவிக்கப்படும் வினைக்கு ஆகாமியம் என்று பெயர். போன பிறவியிலே செய்த வினையில் அநுபவிக்கப் படாது எஞ்சிநின்று அவற்றை இந்தப் பிறவியில் அநுபவிக்கும் வினை பிராரப்தம் எனப்படும். பழைய பிறவியில் வினையைச் செய்து அதன் பலனை இப்பிறவியிலும் அநுபவிக்காது எஞ்சி நிற்கும் வினைக்கு சஞ்சிதம் என்று பெயர்.

இவற்றுள் முக்கியமாக ஒருவரது பிறப்பு ரகசியம் அவரது பிராரப்த வினையில் தான் தங்கியிருக்கிறது. செல்வம் கல்வி, மேன்மை, சுகம் முதலிய இன்பங்களையும் வறுமை மூடம், இழிவு, வியாதி முதலிய துன்பங்களையும் அநுபவிக்க வேண்டியவர்கள் அதை அதைத் தரக்கூடிய குடும்பங்களிலும் இடங்களிலும் பிறப்பார்கள். ஒருவர் உண்டால் மற்றவர்க்குப் பசி அடங்காது. அதுபோல ஒருவர் கர்மவினையை இன்னொருவர் அநுபவிக்க நியதிதத்துவம் இடங்கொடாது. ஆகையினால் அவரவர் வினையை அவரவரேஅநுபவித்தல்வேண்டும். நல்ல பெற்றோரின் பிள்ளைகள் கொடியவராயிருப்பது பிள்ளைகளின் கர்மவசமேயன்றி பெற்றோரின் கர்மவசமில்லை. அதே போன்று நல்ல பெற்றோருக்கு சில பிள்ளைகள் தீயவராயும் சில பிள்ளைகள் நல்லவராயும் வருதல் கண்கூடு. அதனால்

கர்மவசம் அவரவரைப் பொறுத்ததே அன்றி வேறொருவரைப் பொறுத்ததன்று.

இப்படி நாம் கர்மம் செய்தாலும் அதனால்நமக்கு கஷ்டம் விளைகிறது. அதனால் கர்மம் செய்யாது ஒழிவோம் என்று எண்ணுவோர் பலருண்டு. ஆனால் அதல்ல உண்மை. கர்மம் செய்யாது இவ்வுலகில் வாழ்வது சாத்தியமாகாது. இவ்வுலகில் இருக்கும் ஒவ்வொரு உயிரும் அதினின்றுதித்த குணங்களால் தன் வயமின்றிக் கர்மம் செய்விக்கப்படுகிது. ஒரு கணப் பொழுதாவது கர்மம் செய்யாமல் ஒருவராலும் இருக்க இயலாது. இந்தப் பிரகிருதியானது கர்ம சொரூபம். ஆகையால் அதில் கட்டுண்டு கிடப்பவன் கர்மம் செய்தே தீரவேண்டும். உண்பது, உறங்குவது, சுவாசிப்பது ஆகிய அனைத்தும் கர்மம். பிரகிருதியில் பிணிக்கப்பட்டுள்ள உயிருக்கு கர்மத்தைவிடும் சுதந்திரம் கிடையாது. இக் கருத்தையே கீதையில் கிருஷ்ண பரமாத்மா வெகு விரிவாக விளக்குகிறார்.

**"ந ஹி கஸ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்ய கர்மக்ருத்
கார்யதே ஹ்யவச; கர்ம ஸர்வ; ப்ரக்ருதி ஜைர்குணை;**

வெளியே, பார்ப்பவர்களுக்கு தன்னைப் பெரிய கர்ம வீரனாகக் காட்டிக்கொள்வதற்காக கர்மேந்திரியங்களை அடக்கியவன் போல் காட்டிக்கொண்டு ஆனால் மனதால் இந்திரிய விஷயங்களையே எண்ணிக்கொண்டிருப்பவன் பொய்யொழுக்க முடையவனாகக் கருதப்படுகிறான். மேலும் ஒரு மனிதனது புண்ணிய பாவங்கள் அவனுடைய காரியங்களைச் சார்ந்திராமல் அவனுடைய மன நிலையைத்தான் சார்ந்திருக்கின்றன. இரண்டு நண்பர்கள் ஒரு சமயம் சேர்ந்து போகையில் ஸ்ரீமத் பாகவதம் வாசிக்கும் இடத்தை அடைந்தனர். அவர்களில் ஒருவன், "பாகவதம் கேட்கலாமே" என்றான். மற்றவனோ "இதிலென்ன சுகம் இருக்கிறது. தாஸி வீட்டிற்குப் போகலாமே" என்றான். முதல்வன் இதற்கு இணங்காமல் போகவே இருவரும் தன் தன் வழியே போயினர். தாஸி வீட்டிற்குப் போனவனுக்கு அங்கு இன்பம் ஏற்படவில்லை. "அடா" என்னபாவம் செய்துவிட்டேன். என் நண்பன் இப்பொழுது ஹரியின் திவ்விய சரிதத்தைக் கேட்டு ஆனந்தித்துக் கொண்டிருப்பான்" என்று இங்கிருந்து கொண்டு அதையே நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால் மற்றவனோ, "இது என்ன சுகம்! நண்பனோடு தாஸிவீட்டிற்குப் போயிருந்தால் நானும் இன்ப நுகர்ச்சிபெற்றிருக்கலாம்" என்று நினைத்துக் கொண்டிருந்தான். இவன் தாஸிவீட்டுக்குப் போகாவிட்டாலும் அதையே சிந்தித்துக் கொண்டிருந்ததால் நேரில் போன பாவத்தை அடைந்தான். மற்றவன் அங்கிருந்தாலும் இதைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்ததால் அவனுக்குப் புண்ணியமே கிடைத்தது. புண்ணிய பாவங்கள் மனநிலையையே சார்ந்திருக்கின்றன என்பதற்கு இது ஓர் சிறுகதை.



கர்மம் செய்யாததை விட கர்மம் செய்வதே சிறந்தது. உலகில் உயிர்வாழ்வதற்கு கர்மம் செய்தல் அவசியம். நித்திய கருமம் கட்டாயம் செய்தல் வேண்டும். நித்திய கர்மமாவது உண்பது, உறங்குவது, நீராடுவது போன்ற செய்கைகள். நித்திய கர்மம் செய்வதால் புண்ணியமில்லை. ஆனால் இதைச் செய்யாமல் விடுவதால் பாவம். உணவு உண்பதால் புண்ணியமில்லை. ஆனால் உண்ணுவிட்டால் உடம்பு நலிதல் என்னும் பாவம் அடைகிறது.

இதே கர்மம் தனிநலம் கருதாத புண்ணியச் செயலாகவும், தியாக புத்தியோடு செய்யும் சேவையாகவும், உலக நன்மைக்கென்றே செய்யப்படும் செயலாகவும், ஈஸ்வர ஆராதனையாக ஆற்றும் வினையாகவும், பரமார்த்திகப் பெரு நோக்கத்தோடும் செய்யப்பட்ட செயல்கள் யக்ஞம் என்றழைக்கப்படுகின்றன. ஒருவன்எவ்வளவுக் கெவ்வளவுபிறர்க்குஉதவி புரிகிறானோ அவ்வளவுக் கவ்வளவு உலகம் அவனுக்குக் கடமைப் பட்டிருக்கிறது. ஒருவன் ஆற்றுகின்ற வினையை பிறர்க்குப் பயன் படும்படி விரிக்குமளவு அது வேள்வியாக வடிவெடுக்கிறது. கணக்குப் பார்க்கும்போது உலகிலிருந்து பெறும் நன்மைகளைவிட அதிகம் உலகுக்கு வழங்க வேண்டும். பெறுவது பெரிது, கொடுப்பது சிறிதாயிருக்குமிடத்து அவன் கடமைப் பட்டவனாகிறான். உலகுக்கு ஒன்றையும் வழங்காது தனக்காகவே உலகத்திலிருந்து ஏற்றுக் கொள்வதில் கண்ணும் கருத்துமாயிருப்பவன் திருடனாகிறான்.

நாம் நரகத்தை நீக்கி மோட்சத்தை அடைய வேண்டுமானால் நரகத்தின் வாயில்களை மூடவேண்டும். நரகத்தின்

வாயிலை மூடிவிட்டால் நாம் நரகத்துள் புகமுடியாது. நரகத்தின் முதல் வாயிலும் மிகவும் பெரியது மானது அக்ஞானம். இந்த அக்ஞான வாயிலைக்கடந்து உள்ளே சென்றோமானுல் அது காமம், குரோதம், லோபம் என இன்னும் மூன்று வாயில்கள் தென்படுகின்றன. இந்த மூன்று வாயில்களுக்குள்ளும் சென்றுவிட்டால் அது பின்பு நம்மை வெளியே விடாது. அகையால் நாம் முதலிலேயே சிந்தித்து அதன் மூல வாயிலை அடைத்து, பெரிய இரும்புச் சங்கிலியால் பிணைத்து திறக்க முடியாத இரும்புப் பூட்டினுல் பூட்டிவிட வேண்டும். இதை கீதையிலே பாருங்கள்.

"த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசன மாத் மன காம
க்ரோதஸ்ததா லோபஸ் தஸ்மாதேதத் த்ரயம் த்யஜேத்"

தெய்வாசார சம்பத்விபாக யோகத்தில் இருபத்தோராவது ஸ்லோகத்தில் எவ்வளவு சுருக்கமாகவும் அதே சமயத்தில் நம் மூளைகளில் நன்கு பதியுமாறும் கூறிவிட்டார்.

தேகம் எடுத்துள்ள ஒருவனிடத்து முக் குணங்களாகிய சத்வம், ரஜஸ், தமஸ் மூன்றும் அமைந்திருக்கின்றன. அவைகளுள் ஒன்று முன்னணிக்கு வரும் பொழுதுமற்ற இரண்டும் பின்னணிக்குப் போய்விடுகின்றன. விழித்திருந்து அமைதியே வடிவெடுத்தவனுக மனிதன் ஆகும்போது சத்வகுணம் ஓங்கி நிற்கிறது. அப்பொழுது இன்பமும் ஞானமும் விரிவடைகின்றன. ரஜோகுணம் தலையெடுக்கும் பொழுது வித விதமான கர்மத்தில் மனிதன் ஈடுபடுகிறுன். பின்பு தமோகுணம் ஓங்குமிடத்து மனிதன் கற்கவும் முடியாது: கர்மம் செய்யவும் முடியாது. சோம்பலும் தூக்கமும், வருகின்றன. நாள்தோறும் மூன்று குணங்களும் மாறி மாறி முன்னணிக்கு வருகின்றன. எல்லா மனிதர்க்கும் இது பொதுவானது.

அவரவர் விரும்பும் உணவிலிருந்தும் அவரவரது குணத்தை அறியலாம். ஆயுள், அறிவு, பலம், ஆரோக்கியம், சுகம் ருசி ஆகியவைகளை வளர்ப்பவைகள் ரசமுள்ளவைகள், பசையுள்ளவைகள், வலிவு தருபவைகள்,இன்பமானவைகள் ஆகிய ஆகாரங்கள் சாத்விகர் விரும்பும் உணவு. கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, பெருவெப்பம், காரம், வறட்சி, எரிச்சல், மிகுந்தனவும், துன்பம், துயரம், நோய் முதலியன உண்டு பண்ணும் உணவுகள் ரஜோ குணத்தார்க்கு மிகவும் ப்ரீதியானவை. யாமம் கழிந்த, சுவையற்ற துர்நாற்றமெடுத்த பழைய எச்சிலான தூய்மையற்ற உணவு தமோ குணத்தவர்க்கு பிரியமானவை. ஆகையால் நாம் உண்ணும் உணவையும் கட்டுப்படுத்தி உண்டால் குணங்களில் மேலான சத்வ குணத்தைப் பெறலாம்.



முக்குணங்கள் நம்மை இத்துடன் விட்டு விடவில்லை. மரணம் வரைக்கும் நம்மைப் பின்தொடர்கிறது. உடலை விடும் பொழுது உள்ளத்தில் என்ன எண்ணம் நிலைத்திருக்கிறதோ அதற்கு ஏற்ப மறுபிறப்பு அமைகிறது. சத்வகுணம் ஓங்கியிருக்கும் பொழுது தெய்வீக சிந்தனை நிறைந்திருக்குமாகையால், இறக்கும் பொழுது சத்வகுணமுள்ளவன் பிரமமலோகத்தை அடைகிறுன். சத்வ குணத்தில் காலமாகிறவன் முழு அறிவோடு அமைதியாகச் சாகிறுன். ரஜோ குணத்தில் இறப்பவன் பேராவலோடும், பதைபதைப்போடும் துன்பத்தோடும்உயிர் துறக்கிறுன். அதற்கேற்ப, அவன் கர்மப் மற்றுடையார்க்கு மத்தியில் பிறக்கிறுன். தமோ குணத்தில் உயிர் விடுபவனே பிரக்ஞையின்றி ஜட நிலையில் சாகிறுன். அவன் அறிவிலிகள் கர்ப்பத்தில் பிறக்கிறுன். அதுவும் அறிவிலியாகவோ மிருகமாகவோ பிறக்கிறுன்.

ஆதலால் சிநேகிதர்காள்! கவனமாகக் கேளுங்கள். இவ்வளவு நாள் போனது போகட்டும்! இனியாவது கவனமாகஇருங்கள். கர்மம்செய்யாதிருக்காதீர்கள். செய்வதைக்குற்றமில்லாமல் செய்யுங்கள். நித்திய கர்மத்தை விடாதீர்கள். உண்பதை ஜாக்கிரதையாக உண்ணுங்கள். காமம், குரோதம், லோபத்தை அடக்குங்கள். இப்படிச் செய்வதால் கூடிய சீக்கிரம் மோட்சத்தை அடையலாம். பிறவித் தளையிலிருந்தே விடுபடலாம். மணிவாசகனுரைப் போல கூண்டோடு கைலாசம் போகலாம். அதுமட்டுமல்ல.. ............... "புல்லாகிப் பூடாய்ப் .................." என்று பாடவேண்டிய அவசியமும் இல்லை.

# நாளும் கோளும் என்ன செய்யும்?

பாண்டி நாடெங்குஞ் சமணநெறியே நிறைந்திருந்தது. சைவம் ஒடுங்கிக் காலம் கருதியிருந்தது. அரசர் கூன் பாண்டியரும் சமண நெறியிலே அடியிட்டார். பாண்டி நாட்டரசியாரிடமும் அமைச்சர் குலச்சிறையாரிடமும் சைவநெறி மறைவாகத் தங்கியிருந்தது. அவ்விருவரும் அவரைச் சார்ந்த ஏவலரும் உளங்கலங்கிச் சைவந்தலையெடுக்கச் செய்யும் செயல் ஏதாவதுண்டாமோ? இருள் நிறைந்த இந்தப் பாண்டி நாட்டிலே இரவு கழிந்து சைவஞாயிறு வெளிவராதோ? கண் களிக்குங் காட்சிகளைக் காண்போமா? சிவபெருமானுர் திருவுள்ளமென்னவோ? என்று நைந்து நைந்து காலங் கழித்து வந்தனர்.

இந்நிலையிலே காழிவருங் கவுணியர் குலமணியின் சைவத் திருப்பணியைப் பரமரைப் பரவித் திருப்பதிகத் தொடை புனையுஞ் சிறப்பினைக் கேள்வியுற்றனர் பாண்டி நாட்டுச் சைவர்களிருவரும். அவர்களடைந்த மகிழ்ச்சியை அளப்பதெப்படி? திருஞானசம்பந்தரை நேரிற் கண்டாற் போலத் திக்கு நோக்கித் தொழுதனர். உணர்ச்சியால் நட்புக்கிழமை பூண்டனர். தம் ஏவலரில் அறிவிற் சிறந்தவரை தூது விட்டனர். அவர்களும் திருமறைக்காடு சேர்ந்து சீர்காழிச் செல்வர் திருவடிகளைத் தொழுதனர்.

''நீங்கள் யார்?''
''பாண்டி நாட்டரசியாரும் குலச்சிறையமைச்சரும் செலுத்திய ஏவலர்''
''நன்று. அவர்களிருவரும் நலமோ?''
''தங்கள் திருவருளால் நலமே?''
''வந்த வேலையென்ன?''

''பாண்டியரசரும் பாண்டிநாடுஞ் சமணவிருளிலே முழுகியது! எங்கு நோக்கினும் பாயும் பீலியுமே பரவியுள்ளன! அமைச்சரும்அரசியாரும் மட்டும் திருவெண்ணீறணிந்து மறைவிலே சைவத்தைக்காத்து வருகின்றனர். இந்நிலையிலே அடிகளின் பேரொளி பரவி வருவதைச் சைவக் கதிரவன் தழைத்து வருவதைக் கேள்வியுற்றனர். எங்களை விடுத்தனர். பாண்டிநாடு சைவ ஒளியைப் பெறச்செய்ய வேண்டும் என வேண்டிக் கொள்கின்றனர்.''

அங்குள்ள அடியவரெல்லாரும் அவ்வாறு செய்வது சாலச் சிறந்ததென விண்ணப்பித்துக் கொண்டனர். பிள்ளையார் அவர்களுடன் திருக்கோயிலிற் சென்று வணங்கிப் பெரிய கோபுரத்திலமர்ந்து ஆளுடைய அரசர்பால் அவர்கள் வந்திருக்கும் நோக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார். அப்பர் திடுக்குற்ருர்.



''கவுணியர் குலக்கொழுந்தே! சமணர் வஞ்சகர்; அஞ்சாதவர்; இரக்கமில்லாதவர். அவர்களிருக்குமிடத்திற் கெழுந்தருளல் இனியதன்று. கோள்களுந் தீயன.'' சம்பந்தப் பிள்ளையார் புன்முறுவல் செய்தார்.

''ஏன் தங்களுக்கச்சம்? நம்பெருமானுர் திருவடியை வணங்கும் நமக்குக் கோள்களுஞ் சமணரும் எங்ஙனம் தீங்கு செய்ய முடியும்?''

இவ்வாறு கூறி ''வேயுறு தோளி பங்கன்'' எனத் தொடங்குங் கோளறு திருப்பதிகம் புனைந்தருளினுர். அப் பதிகத்தை நாமும் ஓதினுல் நாளும் கோளும் நம்மை வருத்தா.

## கோளறு திருப்பதிகம்

### திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனுல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (1)

என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனுல்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடும் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (2)

உருவளர் பவழ மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனுல்

திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (3)

மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (4)

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்த னோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (5)

வாள்வரி அதள தாடை வரி கோவ ணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (6)

செப்பிள முலைநன் மங்கை ஒருபாக மாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்



வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே (7)

வேள்பட விழிசெய் தன்று விடைமே லிருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழி லங்கை அரையன்த னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (8)

பலபல வேட மாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (9)

கொத்தலர் குழலி யோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (10)

தேனமர் பொழில்கொள் ஆலைவிளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதி ஆய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. (11)

திருச்சிற்றம்பலம்

# நவக்கிரக மாலை

(சுத்தானந்த பாரதியார்)

## 1. பரம்பொருள் வணக்கம்

அன்றும் இன்றும் என்றும் பொன்று
ஒன்றாய் எங்கும் நின்றாய் போற்றி!
பலவாய் உலவும் பரம்பொருளை நின்
அருளே துணையாய் ஆலய வுலகில்
அல்லும் பகலும் அகநெக் குருகி
உயிர்த் தொகையான உனக்கே நாளும்
வாழ்ந்தேன், அன்பில் ஆழ்ந்தேன் ஐயா,
பூமாலை யுடனே பாமாலை சூட்டி
வணங்கிநின் கருத்திற் கிணங்கிய பணிகளை
இயன்ற மட்டும் இயற்றியிந் நாள்வரை
வாழ்ந்தேன், என்னை வழிநடத் திடுவாய்...
உலக வாழ்வில் கலகம் எத்தனை...
காசடிக் கான மோசடி எத்தனை...
முன்கோப மெத்தனை பின்கோப மெத்தனை
நன்றி மறந்த நாசம் எத்தனை...
அடுத்துக் கெடுக்கும் அரக்கர் எத்தனை...
பொய்நரி வஞ்சப் பொறாமை எத்தனை...
எல்லாம் பொறுத்துன் இணையடி துணையென
நல்லதே நாடி நடந்த தூயனை
வருத்தாதினிநல் வளம்பெறச் செய்வாய்.
நவக் கிரகங்களும் நண்பராய்க் கூடித்
துணைசெய வருளாய், இணையறு பரமா!
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதனுடன்
வியாழன் வெள்ளி சனி ராகு கேதுவாம்
ஒன்பது கிரகமும் உன்னொளித் திரளே...
எல்லையற் றோங்கி இடம்விரி வானில்
கோடிக் கோடி கோடி சூரியர்...!
மானிடர் காணும் வானக் கதிரோன்
மேனியிற் சிதறி மிளிர்கிர கங்கள்
நாண்மலர்க் கிடையே கோண்மணிச் சுடர்கள்
சடப் பொருளான சுடர்ப்பொறிச் சுழல்கள்



சித்துப் பொருளாம் சீவனைத் தாக்குதல்
எப்படி என்றும் இயம்பச் செயலிலேன்
சோதிடம் அறியேன்... சூழ்ச்சிகள் அறியேன்
ஏமாற் றங்கள் எத்தனை வரினும்
மனமாற்ற மின்றிநின் மகிமையை நம்பும்
அனாதைக் குழந்தையை அன்புவைத் தாளாய்!
'எல்லாம் நீயே'' என்னும் கொள்கையால்
நவக்கிர கத்திலும் தவக்கிர கத்திலும்
உன்னையே கண்டுள் ளுவந்தேன்; குறைகளை
முறையிடு கின்றேன், மூலப் பொருளே...!
கருணையா ரமுதே, கண்ணுக் கொளியே...!
என்னையாண் டருளி இச்சையை நடத்தாய்

## 2. சூரியன்

சூரிய னுள்வளர் சுடரே வணக்கம்
வீரிய பலமும் வினைத்திட்ப முடன்
மனத்திட்ப மீந்தெனை மாண்புறச் செய்வாய்;
மனவிருள் போக்கி இனப்பகை தீர்த்து
நினைவை உயர்த்தி நீசப் பகையைச்
சுட்டெரித் தான்ம சுதந்தர ஒருமையிற்
கூட்டிநின் சக்தியை ஊட்டி வளர்ப்பாய்
நின்னொளி கண்டு தன்னொளி கண்டு
உன்னொளி யாலே உலகொளி யாக
விளங்கும் யோக வெற்றியைத் தாராய்...
நோயில் லாது நூறுநா றாண்டு
வாழும் வகையை வகுத்தெனைப் பழக்கி,
வாழ்வெலாம் அறிவு வேள்வி யாகிடவே
அருட்கவி வளமை அளிப்பாய் போற்றி!

## 3. சந்திரன்

பொங்கும் இன்பப் புன்னகை யமுதே,
திங்களே சாந்த மங்கலம் பொழிவாய்.
தேய்ந்து தேய்ந்துநீ தினம்வளர்ந் தாலும்
தேயா தென்னுட் சிரித்தொளி வீசாய்...

சினவா ளரக்கர் சீறித் துயர்செய
வரும்போ தவர்மனம் மாறித் திரும்பத்
தண்பனி மொழிகளைத் தருவாய் மதியே...
மொட்டுகள் மலரும் முத்து நிலாவே...
கட்டுகள் நீங்கிக் கவலை ஒழிந்தே,
அழகும் மணமும் அருளும் அன்பும்
பொலிந்திடும் வாழ்வைப் பொழிந்தருள் சசியே!

### 4. செவ்வாய்

செவ்வாய் செவ்வாய் மணக்கச் செய்வாய்!
போட்டி பொறாமைகள் போர்புரி யுலகை
ஆட்டி வைக்கும் அங்கா ரகனே...
மனப்போர் வெல்லக் கனலொன் றளிப்பாய்...
அமைதி யாகநான் அமர்ந்துநல் யோகம்
புரியத் துணைசெய், அரிய துணைவா...
செவ்வாய் என்றால் வெறும்வாய் என்பார்...
செவ்வாய் தோஷம் தேய்க்குமென் பார்கள்;
வறுமைப் பிணியை வெறுமை யாக்குவாய்;
மடமை தேய மாசறு ஞான
ஒளியைத் தருவாய், உலகத் துயர்கள்
பற்று தென்னைப் பரிந்தருள் புரிவாய்...
அங்கா ரகனே, ஆங்கார மின்றிப்
பகைசின மின்றிப் பாரினில் வாழச்
செய்வா யிப்போ, செவ்வா யப்பனே

### 5. புதன்

புதனே போற்றி, இதமுடன் என்னை
நன்மைக்கு நன்மை நடத்துவாய் போற்றி!
அன்பு வடிவே இன்பம் பெருகும்
ஆண்மைக் காதலால் மாண்புறச் செய்வாய்...
காதலைக் கெடுக்கும் மூதேவி யான
பேரா சைப்பேய் பிடியா தொழிப்பாய்...
இதயக் குகையில் உதயக் கதிர்போல்
எழுந்து பொலிவாய் இன்பம் பெருகவே!
துன்ப வினைகளைத் தூருடன் போக்கித்



தொல்லையில் லாத தொண்டினில் ஊக்கி
நாளெல்லாம் அன்பு வேள்விசெய் திடவே
அறிவுந் திருவும் ஆற்றலும் அளிப்பாய்...
"பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காதே"
என்பர் உலகோர்; இதனை நம்பி
இடைவிடா துன்னை ஏத்திப் பணிந்தேன்.
திருவும் அறிவுந் தருவாய் அரசே!

### 6. வியாழன்

ஆழநல் லறிஞனும் வியாழ பகவனே!
உலகக் குருவே உயர்தவச் சுடரே!
கல்வியும் கலையும் கைத்தொழிற் செல்வமும்
வேத ஞானமும் வித்தகச் சித்தியும்
யோகக் கலையின் உன்னதப் புலமையும்
பன்மொழித் திறனும் நன்மொழிச் சுவையும்
உயர்ந்த சிந்தையும் உள்ளத் தெளிவும்
சாதி மதமிலாச் சத்திய சுத்த
சக்தி யோக சாதன வெற்றியும்
ஈவாய் குருவே இன்பத் தெய்வமே!

### 7. வெள்ளி

உள்ளம் கவரும் வெள்ளியே போற்றி!
மிக்க நலந்தரும் சுக்கிரா போற்றி!
எக்குறை யுமிலா மிக்குயர் வாழ்வை
சுக்கிர தசையெனச் சொல்லுவர் மேலோர்..
சீரும் சிறப்பும் பேரும் புகழும்
செல்வமும் கல்வியும் சேர்ந்துல கெல்லாம்
போற்றும் பேற்றை ஆற்றுவாய் போற்றி!
வெள்ளிக்கு வெள்ளி வீறு மிகுந்த
விழுமிய ஞகி விளங்கிடச் செய்வாய்..
அதிட்ட மென்பதுன் இட்டமே யாகும்...
கண்பார்த் தெனது கவலைதீரப்
புண்களைப் போக்கிப் பூரண மாக்கி
மங்கலம் பொங்க மகா லட்சுமியின்
புன்னகை யமுதம் பொலியப் பொலிய

வளம்பெறு வாழ்வை வழங்கி யருளாய்...
வெள்ளியே உனக்கென் உள்ளன் பாமே!

### 8. சனி

சனிபக வானே சனிபக வானே !
சரணம் சரணம் சனிபக வானே...!
உன்னை உலகோர் என்னவோ சொல்லி
அஞ்சுவர்; சனியென அருவருத் தோடுவார்...
தீயன நினைத்துத் தீயன சொல்லி
தீயன செய்யும் தீயரை ஒறுப்பாய்...
நல்லன நினைத்து நல்லன சொல்லி
நல்லன செய்யும் நண்பரைக் காப்பாய்...
மண்பெண் பொன்னில் மயங்கித் திரியும்
ஆசைப் பேய்கள் அணுகா தொழிப்பாய்;
ஏமாற்று கின்ற மாமாய வலையில்
இழுத்துத் துயர்செய் இகலைக் கெடுப்பாய்;
புல்லிய நினைவுகள் புகாதெனைக் காத்து
நல்லியல் யோக நாட்டமே தருவாய்...
சனியே என்னை இனிக்கலக் காமல்
அங்கும் இங்கும் அலைத்தழிக் காமல்
பகைவரைத் தூண்டிப் பழிசுமத் தாமல்
அமைதி தருவாய்; அன்புசெய் கின்றேன்...
மேலும் மேலும் மேலும் யோக
சித்தி யளித்துச் சக்தியை வளர்த்துச்
சிந்தை யெல்லாம் சிவத்தேன் ஊறிக்
கவிமலர் மாலை கவின் பெறச் சூட்டிப்
பேரும் புகழும் ஊரின் மதிப்பும்
பொதுஜன நட்பும் பொங்கும் செல்வமும்
நாவசைந் ததுமே நாடசைந் துதவும்
செல்வாக் கருளாய், நல்வாக் கருளாய்...
சனிபக வானே, சனிபக வானே...!
சரணம் சரணம் சனிபக வானே!

### 9. இராகு, கேது

இராகுவே, கேதுவே, இப்புவி வாழ்வில்
இன்னலும் இடரும் எண்ணறப் பட்டேன்;



இருளில் வருந்தினேன், இழிநிலை இன்றி
அருளைத் தூண்டி ஆக்க மளிப்பீர்.
படமெடுத் தாடும் பாம்பென நவில்வார்
மதியை விழுங்கும் மருளென மருள்வார்
அவ்வகை நினையேன், செவ்விய நல்லீர்
தீய பகையைத் தீண்டி விழுங்குவீர்...
நல்லதை யிங்கே நாடிடப் புரிவீர்
மதிரவி மறைய விதிநிழல் பரப்பும்
கோள்காள் உம்மைக் கும்பிடு கின்றேன்...
யோகமும் பாட்டும் ஆகுமெய் வாழ்வில்
பகைசெய் கவலைப் பாம்பு புகாமல்
ஆசை யகந்தை மாசு புகாமல்
ஒளியும் உரமும் தெளிவுந் தேசும்
அருளும் ஆண்மையும் அஞ்சா நெஞ்சும்
தந்து நடத்துவீர் தாயன் புடனே
வந்து நடத்துவீர்; வளம் பெறு வாழ்க்கை
உமக்கே நிவேதனம்; உயர்வான் சுடர்காள்!
நண்பராய் வருவீர், நவக்கிர கங்காள்...
உம்மை வணங்கி உலகில் வாழ்கிறேன்,
வாழ்வெலாம் யோக வேள்வியா குகவே!
நலமெலாம் பொலிய நிலமெலாம் வாழ்கவே!

ஓம் சுத்த சக்தி!


**நாராயணன் கைத்தொழிற்சாலை.**

தொல்புரம் — சுழிபுரம்

மாபிள் சீமென்றிலான பொருட்கள் உற்பத்தி
செய்யப்படுகின்றன.

மாபிள் மேசைத் தட்டுகள் முதலாக எல்லாப்பொருட்களும் பூச்சாடி வகைகள், தண்ணீர்க் குழாய்கள், சீமென்ற் முகட்டோடுகள், மலசலகூடக் கற்கள் யாவும் செய்து கொடுக்கப்படும்.

எமது உற்பத்திப் பொருட்கள் வட-மாகாணத்தில் உள்ள சகல இரும்புக் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

# அறிஞரில் அறிஞன்

(வித்துவான் சு. சுவர்ணகாளீச்சுரன்)

80ஆம் பக்கத் தொடர்ச்சி

தைரியமாயிரு, இன்பமாய் வாழ், அன்பு செய், எல்லாவற்றிற்கும் முதன்மையாக பத்தி செய்ய உரிய இறைவனுக்கு கீழ்ப்படிந்து நட!.

இவ்வாறே பிரஹலாதர் இறைவனுக்கு கீழ்ப்படிந்தார். தான் ஐந்து வயதுப் பாலகனாக இருந்த பொழுதிலும் பல துன்பங்களைத் தாங்கினார்.

பிரஹலாதன் பிழைத்ததைத் தூதுவர்கள் வந்து சொன்னார்கள். அப்பொழுதாவது பிள்ளை பிழைத்தான் என்று எண்ணினானா? இல்லை. இறையுணர்வு இல்லையேல் பிள்ளைப் பாசம் கூட நிலைக்காது என்பதை நமக்குப் புலப்படச் செய்கிறான் இரணியன்.

பின்பும் அழைத்து நீ கூறுகிறவன் எங்கு இருக்கிறான்! சொல்லுபார்போம். என்கிறான் இரணியன். எங்கு இருக்கிறான் என்றா கேட்கிறாய்! சாணிலும் அவன் இருக்கிறான். அது மட்டுமா? ஓர் அணுவை நூறு கூறிட்டால் ஒரு பகுதிக்குக் கோண் என்று பெயர். அக் கோணிலும் இருக்கிறான். மாமேருகுன்றினுமுளன். நீ சொன்னாயே அச்சொல்லிலும் இருக்கிறான். இந் நின்ற தூணிலும் இருக்கிறான். தேடக் கூடிய எண்ணம் வந்ததே அதுவே உனக்கு நற்காலம் விரைந்து காண்பாய்! என்று முழங்குகிறான்.

(இதனை உணர்த்திய கம்பநாடர் அணுவைப் பிரிக்க முடியாது என்று எண்ணிய காலத்திலிருந்தவர். ஆயினும் அவர் கூறுகிறார் அணுவில் நூறில் ஒரு பகுதி கோண் என்று இதனை அறிவியல் அறிஞர்கள் சிந்தித்துச் சிந்தித்து மகிழ்வார்களாக)

இத் தூணிலும் இருக்கிறானோ அவ்வாறு இத்தூணில் காட்டாவிட்டால் உன்னை யானையின் மத்தகத்தை எவ்வாறு பிளந்து சிங்கமானது இரத்தத்தைக் குடிக்குமோ அவ்வாறு உன்னைப் பிளந்து உன் இரத்தத்தைக் குடிப்பேன் என்கிறான் இரணியன். தன் பிள்ளையைப் பார்த்து ஒரு தந்தை கூறத்



தக்க வார்த்தையா இது? இவ்வாறு கொடுமைப் பண்பு விளைவானேன் இரணியனுக்கு? தெய்வீக உணர்ச்சி இல்லாததே இந்த விபரீதத்திற்குக் காரணம் என்பதை நேயர்கள் உணர்வீர்கள்.

இவ்வாறு கர்ஜிக்கும் இரணியரைப் பார்த்து பாலகராகிய பிரஹலாதர் அஞ்சினாரா? இல்லை, இல்லை. இறைமை உணர்ச்சி உடையோருக்கு அச்சமேது? இரணியா அவ்வாறு எண்ணாதே! என்னைக் கொல்வது என்பது உன்னால் முடியக் கூடிய செயலல்ல. யான் சொன்னவன் தொட்ட தொட்ட இடங்களில் தோன்றவில்லையானால் என் உயிரை யானே மாய்ப்பன், பின்னும் இவ்வுயிரை வைத்துக் கொண்டு வாழ்வேனானால், அந்த நாரயாணனுக்கு அடிமையல்லேன் என்று வீரவுரை பகர்கின்றார் பிரஹலாதர். இந்த வீர உணர்ச்சி இறைவன் திருநாம மகிமையால் வந்ததல்லவா?

இரணியன் எதிரே இருந்ததூணைக் காலால் உதைக்கிறான் தூண் இருதுண்டாகப் பிளந்தது. இறைவன் நரசிங்க மூர்த்தியாய் எழுகின்றான். பிரஹலாதர் இரு கைகளையும் சிரசின் மேலே கூப்பி ''பெருமானே! பெருமானே? என் பொருட்டு எழுந்த நின் கருணையை என்னென்பேன்'' என்று துதித்து தன்னை மறந்து நிற்கிறார். பெருமானைப் பார்த்தும் இரணியன் திருந்தினானா? இல்லை, இல்லை, மேலும் கோபித்தெழுகிறான், பிரஹலாதர் இப்பொழுதாவது எம்மானை வழிபடு. உன்னை ஆட்கொள்வார் எனக் கூறியபோதிலும், தன் ஆணவம் தோன்றவே விடை கூறுகிறான். நீ கூறுவதுபோல் பேடியாய் இவனை வணங்குவேன் என்றா எண்ணுகிறாய்! இவன் தோளையும், தாளையும் நீக்கி உன்னையும் துணித்து அவ்வாளை வணங்குவேனேயல்லாமல் நான் பிறரை வணங்குதல் என்பது மகளிருடல் காலத்தில் கூடக்கிடையாதே எனக்கர்ஜித்தான். பெருமானை எதிர்த்தான். பெருமான் அவனைத் தனது தொடையிலிருத்தி அவனை இரு கூறாகக் கிழித்துச் சம்ஹரித்தார். பிரஹலாதரோ இரு கைகூப்பிய வண்ணம் இறைவனைப் போற்றி நிற்கிறான்.

இத் திவ்விய சரித்திரத்தால் நாமறிவது தெய்வீக உணர்ச்சியைத் தரும் கல்வியே நன்மை தரத்தக்கது, அதற்கு மாறுபட்ட கல்வியால் எத்தகைய பயனுமில்லை. தெய்வீக உணர்ச்சி இல்லாதவரால் உலகிற்குத் துன்பமே விளையும். தெய்வீக உணர்ச்சி எத்துன்பத்தையும் சகிப்பதோடு

உண்மை வீரத்தையும் தரும். அத்தகைய உணர்ச்சியுடையோரே தூய அறிவுடையோராவார். இதனாலேயே கம்பநாடர் பிரஹலாதரை ''அறிஞரில் அறிஞன்'' ''அறிஞரில் தூயோன்'' ''அறிவின் மிக்கான்'' எனப் பாராட்டி மகிழ்கின்றார். இத்திருவரலாற்றைக் கூறாத சங்கநூல்கள் இல்லை. கவிவாணர்கள் இல்லை. இவ்வாறு இறைவன் நரசிம்ம மூர்த்தியாக எழுந்தருளிய பெருங்கருணையை,ஆழ்வார் தனது பெரிய திருமொழியாலே கூறும் அருமைத் திருப்பாசுரத்தைச் சிந்தித்து அப்பரந்தாமன் திருவடித்தாமரைகளை ஏத்தி ஏத்தி மகிழ்வோமாக

''பள்ளியில் ஓதி வந்ததன் சிறுவன்
வாயில் ஓராயிர நாமம்
ஒள்ளிய வாகிப் போதஆங்கு அதனுக்கு
ஒன்றுமோர் பொறுப்பில னாகி
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண்புடைப்ப
பிறைஎயிற் றனல்விழிப் பேழ்வாய்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவை
திருவல் லிக்கேணி கண்டேனே.

(பெரிய திருமொழி)

—முருகா—

## ஈழத்துச் சிதம்பரம்

ஆசிரியர்:— சிவஸ்ரீ. ச. கணபதீசுவரக்குருக்கள்
வெளியீடு:— காரைநகர் சுந்தரேசுவரர் தேவத்தானம்,
விலை:— ரூபாய் இரண்டரை.

சிவபூமி என்று திருமூலரால் போற்றப்பட்டது ஈழநாடு ஆகும். அத்தகைய ஈழத்தில் பழம்பெருங் கோயில்கள் பலவுள. ஈழத்துச் சிதம்பரம் என்னும் இந்நூல் ஈழநாட்டின் வட பாகத்தின் கண்ணதாகிய காரைநகரிலுள்ள புராதன சிவாலயத்தைப் பற்றியதாகும். கோயில் வரலாறுகளைப் படிக்கும்போது எம்பெருமானாருடைய பெருமையையே படித்துக்கொள்ளுகின்றோம். புராணம், சரித்திரம், ஆத்மீகம் மூன்றும் கலந்ததே இந்நூலாகும். நூலின் முகப்பிலேயே நடராஜப் பெருமானார் ஆனந்தத்தாண்டவம் செய்து அம்பிகையுடன் அருள்புரியும் திருக்கோலத்துடன் காணப்படுகின்றார். ஒவ்வொரு சைவர்களுடைய இல்லத்திலும் அவசியம் இருக்க வேண்டிய நூலாகும்.



# எனது ஐரோப்பிய யாத்திரை அநுபவங்கள்

(க. இராமச்சந்திரன்)

முன் தொடர்ச்சி

அம்மையாரின் வாக்கைத் தெய்வ கட்டளையாகக் கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தேன். ஐந்து நிமிஷத்தால் அன்னார் தம்மோடு கூடிவந்த பள்ளிக்கூட மாணவியின் கையைப் பிடித்துக்கொண்டு இறங்கினார். யானும் இறங்கி தாயின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் சேய்போலத் தொடர்ந்து சென்றேன். றோம் புகைரத நிலையத்தை அடைந்ததும், அம்மையார் விசாரணைக் கந்தோருக்குள் சென்று ஆங்கிலம் தெரிந்த ஓர் பெண் உத்தியோகஸ்தரை எனக்கு அறிமுகஞ் செய்து வைத்தார். இத்தாலி நாட்டில் நான் செய்யப்போகும் பிரயாணம் முழுவதற்கும் தான் இருமொழிகளில் அட்டவணை போட்டுக் கொடுப்பதாகப் அந்தப் பெண் பொறுப்பேற்றதும், அம்மையார் பிரியா விடை கூறும்போது, ''I pray for you'' — உங்களுக்காக நான் பிரார்த்திக்கிறேன் — என்றார். அவரது இந்த இறுதி ஆசிமொழி எதிர்காலம் பற்றியமையாது நிகழ்காலங் குறித்திருந்த தன்மை என் உள்ளத்தை உருக்கியது. பத்து நிமிட அறிமுகத்தில் பல ஜென்மங்களின் அத்யாத்ம உறவின் அனுபவத்தைப் பெற்று ஆனந்தக் கண்ணீர் விட்டேன். அம்மையாரும் அவருடன் கூடிநின்ற சிறுபெண்ணும் உடனே கலங்கி விட்டார்கள். உண்மையில் எனக்கு வழிகாட்டியது ஓர் மனிதப் பிறவிதானா அல்லது வழிபடும் தெய்வமே மனித உருவில் காட்சியளித்து மறைந்ததோ என்ற சந்தேகம் இன்றும் என் மனதில் உள்ளது. இற்றைக்குப் பதினொரு ஆண்டுகட்கு முன் குடும்பத்துடன் வட இந்திய யாத்திரை செய்த போது, வங்காளத்தில் பங்கூரா ஜில்லாவில் தூய அன்னை சாரதாதேவியாரின் பிறந்த கிராமமாகிய ஜயராம் பட்டிக்குச் சென்ற வேளையில் பெற்ற அனுபவமும் ஆதரவும் சரியாக இதேபோன்ற ஒன்றாகும். நம் உள்ளத்தில் அன்பு என்னும் மொழி சதா பேசிக் கொண்டிருந்தால், நாம் இந்தப் பரந்த உலகில் எந்த மூலைக்கும் போகமுடியுமென்ற நம்பிக்கை இவ்வித எதிர்பாராத நிகழ்ச்சிகளால் உரம் பெறுகிறதல்லவா?

அடுத்த நாள் அஸிசிக்குச் செல்வதற்குப் பிரயாணச் சீட்டுப் பெற்றுக்கொண்டு விடுதிச்சாலைக்குத் திரும்பினேன். ரோமாபுரியை விட்டுப் பிரியுமுன், ரோம் ராஜ்யத்தைப் பற்றிய சில முக்கிய சரித்திரக் குறிப்புகளை இங்கு தர விரும்புகிறேன். ஐரோப்பாவில் எந்த நகரத்திற்குச் சென்றாலும் அங்கே நாம் காண்பது ரோமாபுரியின் பிரதிவிம்பத்தையே. ஆனபடியால், இக்குறிப்புகள் வாசகர்கட்கு அறிவும் மகிழ்ச்சியும் அளிக்கக் கூடியவை. ஐரோப்பிய நாகரிகத்திற்கு கிரேக்கர்களின் அறிவுக் கலையும் அழகுக் கலையும் அத்திவாரமாய் அமைந்திருந்த போதிலும், மக்களின் நாகரிக வாழ்வின் ஏனைய துறைகளிலெல்லாம், அதாவது நகர அமைப்பு, அரசியல், சட்டங்கள், போக்குவரத்து வசதிகள் முதலாயவற்றிலெல்லாம், வழிகாட்டியவர்கள் ரோமர்களே. லத்தீன் மொழியிலுள்ள வேட்டஸ் (Virtus), மொடறேற்றஸ் (Moderatus), பயஸ் (Pius) றெஸ்பவிளிக்கா (Respubli–ca) என்ற சொற்களே உண்மையான நாகரிக வாழ்விற்குப் பொருத்தமான அருங்கருத்துவாய்ந்தவை. அவை முறையே குறிப்பது ஆண்மை, அடக்கம், விசுவாசம், எல்லார்க்கும் பொதுவான ஒன்று, என்பவற்றையேயாம். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு தொடக்கம் முதலாம் நூற்றாண்டுவரையில் ரோம் என்பது அந்தப் பெயருள்ள நகரத்தையும் அதின் சுற்றாடலையுமே குறித்திருந்தது; நடைபெற்றது குடியாட்சியே. முடிசூடிய மன்னர்கள் இருக்கவில்லை. செனேற் சபையும், மக்கள் சபையும் இருந்தன. செனேற் என்ற பதம் இன்று உலகெங்கும் பரவியுள்ள ஒன்று. அதின் மூலம் லத்தீன் மொழியிலுள்ள செனெக்ச் (Senex) ஆகும். அதின் கருத்து 'வயோதிப மனிதன்' அல்லது அநுபவம் வாய்ந்த முதியோன் என்பதாம். இவர்கள் கையில்தான் அரசாங்கம் அன்று இருந்தது. கி.மு. முதலாம் நூற்றாண்டில் இந்த அரசின் செல்வாக்கு மத்திய தரைக் கடலைச் சுற்றிய நாடெங்கும் பரவியது; ரோமாபுரி அரசு ரோம சாம்ராஜ்யமாக மாறியது. முதல் சக்ரவர்த்தியாக முடிசூட்டப்படவிருந்த ஜூலியஸ் சீஸர் கி.மு. 44ம் ஆண்டில் படுகொலை செய்யப்படவே, ஆகஸ்றஸ் சீஸர் சக்ரவர்த்தியாக முடிசூட்டப் பெற்றான். கிறிஸ்தவ சகாப்தத்தில் முதல் இரு நூற்றாண்டுகளில் ரோம் ராஜ்யம் ஐரோப்பாவின் நாற்றிசையிலும் பரவி சீரும் சிறப்பும் பெற்றிருந்தது. வேர்ஜில் (Virgil) ஹொறேஸ் (Horace) ஆகிய இருபெரும் புலவர்கள் தோன்றினர். லத்தீன் மொழி ஓங்கி வளர்ந்து. ஐரோப்பா முழுவதும் செல்வாக்குப் பெற்றது. கி. பி. இரண்டாவது நூற்றாண்டு முடி-



யுமுன் பிறநாட்டுப் படையெடுப்புக்கள் வரவே, உள்நாட்டுக் கலகங்களும் பிரிவினைகளும் தோன்றி, சாம்ராஜ்யத்தின் மங்குதிசை ஆரம்பமாயிற்றெனலாம். அது மறைந்த போதிலும், அதின் பயனாகத் தோன்றிய சட்டமும், திட்டமும், நகராண்மைத்திறனும் இன்று உலகெங்கும் நடைமுறையில் உள்ளன. அன்றிருந்த முதியோர் சபையின் நேர்மையுடனும் ஆட்சித் திறனுடனும், இன்று நாம் காணும் அரசாங்க மன்றங்களின் நடைமுறைகளை ஒப்பிட்டுப்பார்க்கும் போது, நவீன நாடுகள் எவ்வளவுதூரம் அரசியல் துறையில் வெற்றிகரமாகப் பின்வாங்கியுள்ளனவென்பது தெற்றென விளங்கும்.

இனி, ஆவலுடன் தரிசிக்க விரும்பிய அஸிசிக்குச் செல்வோம். ரோம் நகரிலிருந்து என்னுடன் பிரயாணஞ் செய்த இத்தாலியருக்கு ஆங்கிலம் தெரிந்தது எனது, சைவ உணவு பற்றிய பிரச்னையை அவரே தீர்த்து வைத்தார். அத்தோடு நின்றுவிடாது, அஸிசியில் நான் தங்கிய இடத்து அதிபருக்கும் அதைப்பற்றியும் மோட்டார் முதலாய வசதிகள் குறித்தும் சகல விபரங்களும் கூறிச் சென்றார். எனவே, வாய்திறந்து ஏதாவது கேட்க வேண்டிய தேவையே இல்லாமல் போய்விட்டது. அஸிசி இத்தாலியின் நடுப்பாகத்துலுள்ள ஓர் மலைநாடு. அதின் நாலா பக்கங்களிலும் இயற்கை வளஞ் செறிந்துள்ளது. தாகம் ஏற்பட்டால் குடிப்பதற்கு திராட்ச ரசப்பழப்பானமும் (Wi–ne) பாலும் ஏராளமாய்க் கிடைக்கின்றன. ஃபிரான்ஸிஸ் தேவரின் ஆலயம் மலையுச்சியில் அமைந்துள்ளது. பழனி ஆண்டவர் கோயிலை எனக்கு நினைவூட்டியது. ஆனால் ஆலயத்தைச் சுற்றியெழுந்துள்ள பட்டினம் பதினைந்து சதுர மைல் விஸ்தாரமுள்ளது. ஆலயத்தின் மேல்மாடியின் முற்றத்தில் நின்றுகொண்டு பட்டினம் முழுவதையும், அதைச் சூழ்ந்துள்ள பொழில்களையும் நந்தவனங்களையும் பார்த்து இன்புறலாம். நான் இந்தப் புனித ஆலயத்தை அடைந்த போது நானூறு அமெரிக்க உல்லாசப் பிரயாணிகள் வந்து குழுமியிருந்தனர். முன் அறிவிப்புடனும் அறிமுகக் கடிதங்களுடனும் வந்த பிரமுகர்களான படியால், அவர்கட்காக ஆலயத்தைத் திறப்பதற்கு ஓர் நேரம் நியமிக்கப் பட்டிருந்தது. அதற்காக அவர்கள் கீழ்மாடியின் முற்றத்தில் புகைப்படம் எடுக்கும் கருவிகளைச் சீர்படுத்திக் கொண்டு காத்திருந்தார்கள். என்னைக் கண்டதும், முக்கியமான எனது சுத்த வெள்ளைப் பருத்தி உடையைப் பார்த்ததும் அவர்கள் பலரின் புகைப்படக் கமெறாக்கள் அசையத் தொ-

டங்கின. அந்த இடத்தில் சிறிதும் தாமதிக்காது, விசாரணை எதுவுஞ் செய்யாமல் என்முன்தோன்றிய படிக்கட்டுகளில் ஏறிச் சென்றேன். எவ்வித முன் ஒழுங்குமின்றி, ஃபிரான்ஸிஸ் தேவரின் திருச்சித்தத்தையே நம்பிச் சென்ற எனக்கு அறிவுக்கறிவாய் நின்று அவரே அந்த நேரத்தில் இந்த வழியை எனக்குக்காட்டியிருக்கலாம். படிகளில் ஏறிச் செல்லச் செல்ல, உள்ளத்தில் சொல்லரும் அமைதி ஏற்பட்டது. அந்த அமைதி நிலையில்

''முன்பு செய்தவத்தி னீட்ட முடிவிலா வின்பமான
அன்பினை யெடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
என்பு நெக்குருகி யுள்ளத் தெழு பெரு வேட்கையோடும்''

என்னும் சேக்கிழாரின் அரிய பாடல் பளிச்சென்று நினைவுக்கு வந்தது. கடைசிப்படியைத் தாண்டி முற்றத்தைச் சேர்ந்த பின்தான் அது அந்த ஆலயத்தின் மேல் மாடியென்ற அறிவு உதயமானது. கையில் இருந்த பத்திரிகையைத் தரையில் விரித்து அதன்மேல் உட்கார்ந்து தியானம் செய்யும்படி உள்ளுணர்ச்சி தூண்டியது. தியானத்தில் ஐந்து நிமிடங்கள் கழிந்திருக்கலாம். எனக்குமுன் நேரே இருந்த கதவு திடீரெனத் திறக்கப்பட்டு, கத்தோலிக்க குரு உடையில் தோன்றிய ஒரு பெரியாரின் அழைப்புங் கிடைத்தது. நான் உள்ளே சென்றதும், அவர் தமது வலக்கரத்தை உயர்த்தி எனது தலைமேல் வைத்து, ஆசி தந்ததும், கதவைச் சாத்திப் பூட்டி விட்டார். ஒரு சொல்லும் பேசாது அவர் முன் செல்ல, அவர் கையால் செய்தசைகைகளை விளங்கிக் கொண்டு பின் சென்றேன். தெய்வ சாநித்தியமும் அமைதியும் குடிகொண்டிருந்த அந்தப் பெரிய மண்டபத்தின் பின்பக்கத்து மூலையில் சிறிது நேரம் நின்று வணக்கஞ் செலுத்தினார் எனது வழிகாட்டி. ஃபிரான்ஸிஸ் தேவரின் கல்லறையென்பதை யூகித்துணர்ந்து அங்கேயே தியானத்தமர விரும்பினேன். ஆனால் கூட நின்றவர் சம்மதிக்கவில்லை. அவசரம் அவசரமாக மூன்றாவது மாடிக்கும் அழைத்துச்சென்று பின்னர் அங்கிருந்து இறங்கி, இரண்டாம் மாடியிலிருந்து நிலமட்டத்திற்குச் செல்லும்படிகள் யார்க்கம் ஓட்டம் பிடித்தார். நானும் அவரைத் தொடர்ந்து இறங்கும்போது, கீழே உள்ள முன்வாசல் கதவுகள் திறக்கும் சத்தம் கேட்டது. வெளிமுற்றத்தில் காத்திருந்த அமெரிக்கப் பிரயாணிகள் கூட்டமாக உள்புகுந்தனர். அவர்களுக்கு ஆங்கிலத்தில் எல்லாம் விபரமாக எடுத்து விளக்க, அம்மொழி



தெரிந்த ஒரு குருவும் கூடவந்தார். இந்தக் கூட்ட நெருக்கடியில், எனக்கு வழிகாட்டிய அன்புப் பெரியார் மறைந்துவிட்டார். அவர் என் வெளிக் கண்களுக்கு மறைந்தபோதிலும், என்றும் என் அகக்கண் முன் நிற்கிறார். அந்தரங்கமான அற்புத அத்யாத்ம அனுபவங்கள் மிகவும் இரகசியமாகப் பேணப்பட வேண்டியவை. அப்படியிருந்தும் 'ஆத்மஜோதி' வாசகர்கட்கு அவற்றை மறைக்க என்னால் முடியவில்லை.

பின்னர் கூட்டத்துடன் சேர்ந்து யானும் இரண்டாவது முறையாக ஆலயத்தின் எல்லாப் பாகங்களையும் தரிசித்தேன். ஆங்கிலத்தில் விளக்கப்பட்ட விபரங்களையும் அறிந்து கொண்டேன். கூடிவந்த குருவானவருக்கு நன்றி கூறி விட்டுக் கூட்டம் கலைந்தது. அவர் தனியாக நிற்கும் சமயம் பார்த்து, தாடியுடன் வந்து என்னை மேல் மாடி வாசலால் ஆலயத்துள் அழைத்துச் சென்ற சுவாமியாரை நான் மறு படியும் சந்திக்க முடியுமோவென அவரிடம் விசாரித்தேன். அவர் ''இங்குள்ள குருமார்களெல்லாம் என்னைப் போல் தாடியில்லாதவர்களே'' என்று ஹாஸ்ய நடையில் பதில் இறுத்துவிட்டு அவசரமாக எவரையோ காண்பதற்காகச் சென்றார். இந்த நிலைமையில் என்னைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டு நின்ற ஓர் அமெரிக்க அன்பரும் அவரது மனைவியாரும் என்னை அண்டி உரை ஆடத்தொடங்கினார்கள். நானூறு பேர்களில் இவ்விருவரே, அவர்களுக்காகக்கதவுகள் திறக்கப்பட்ட வேளையில், நான் முன்னரேயே ஆலயத்துள் நின்ற உண்மையைக் கவனித்திருந்தார்கள். எல்லா விபரங்களையும் அவர்கட்கு யான் பக்தி உணர்ச்சியுடன் எடுத்துக் கூற பரவசத்துடன் கேட்டின்புற்றார்கள். கூட்டம் முழுவதும் வெளியேறிய பின் நான் முதலில் உட்கார்ந்து தியானஞ் செய்த இடத்தில் என்னை நிற்கச் செய்து படம் எடுக்க விரும்பினார்கள். இதுவும் ஃபிரான்ஸிஸ் தேவரின் லீலையெனக் கருதி உடன் பட்டேன். அவர்கள் ஆலயத்துடன் என்னையுஞ் சேர்த்து எடுத்த இப் படம் எனது அஸிசியாத்திரையின் ஞாபகச் சின்னமாக விளங்குகிறது. அதை எடுத்துதவிய அன்பர்கள் இருவரும் எனது அத்யாத்ம உறவினராய், யான் ஆங்கில சஞ்சிகை மூலம் செய்து வரும் அன்புப் பணிக்கு ஆதரவு தருகிறார்கள். இந்த அன்பர் அமெரிக்காவில் ஓர் மாகாண நீதியரசர். அவர் பாரியாரும் ஓர் அரிய பக்தை. இருவரும் என்னை அமெரிக்காவுக்கு யாத்திரை செய்யும்படி கேட்கும் குழுவைச் சேர்ந்தவர்கள்.

மனித சமூகத்திற்கு ஒளி கொடுக்கும் பெரியார்கள் மிருக சக்தியை நம்பி மண்ணாசையால் மதியிழந்த மன்னர்களல்ல அரசியல்வாதிகளல்ல முடிசார்ந்த மன்னர்கள் எத்தனையோ பேர் பிடிசாம்பராய் மறைந்தனர். முடியரசுகள் குடியரசுகளாய் மாறலாம்; குடியரசுகள் பழையபடி முடியரசுகளாய்த் திரும்பலாம். இந்த மாற்றங்களை இத்தாலி நாட்டின் சரித்திரத்திலேயே பல முறை காண்கின்றோம். ராணுவப் பெருக்கத்தின் இறுமாப்பால் தலையிழந்த முசோலினியின் பெயரைச் சொல்லும் மக்களை இன்று இத்தாலி நாட்டில் சந்திக்க முடியாது. அவனுக்கு ஆசியும் ஆதரவும் அளித்த கத்தோலிக்க குருமார்களின் பெயர்களை உச்சரிக்கவே மக்கள் கூசுகிறார்கள். ஆனால் இற்றைக்கு ஏழரை நூற்றாண்டுகட்கு முன் வாழ்ந்த ஃபிறான்ஸிஸ் தேவரின் ஆத்ம ஒளி இன்னும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அவரது குருபூசைத் தினம் ஒக்ரோபர் 4ந் தேதி பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகிறது. இரண்டாவது கிறிஸ்து நாதராக அவர் போற்றப்படுகிறார். இந்த மஹான் புல்லுடனும் பூண்டுடனும், புலியுடனும் நரியுடனும், ஆன்ம நேய ஒருமைப் பாடுடன் வாழ்ந்தவர். கருணையே வடிவானவர். அவரது பாடல்களின் அருங்கருத்துக்கள் அருட்பிரகாசவள்ளலாரின் பாடல்களில் எதிரொலிக்கின்றன. அற்புதமான முறையில் அப்பெரியாரின் காட்சியும் ஆசியும் பெற்றதும், அவரது உத்தம சீடரான அந்தோனியார் சமாதியடைந்த பாடுவா என்னுந் தலத்தைத் தரிசிக்க என் உள்ளந் துடித்தது.

(தொடரும்)

பின் குறிப்பு— எமது யாத்திரை அனுபவக் கட்டுரையில் கருத்தைத் தவறுக்கும் எழுத்துப் பிழை ஒன்று புகுந்து விட்டது. அதாவது பக்கம் 50 வரி 15 — பழங்குடிகளில் சிலர் ''நீலநதிக் கரையில் குடியேறி'' — என வர வேண்டியது 'நீந்திக் கரையில்' என்று வந்துள்ளது. வாசகர்கள் அதனைக் கவனிக்கக் கோருகிறோம்.



# நாமதேவரது உவமை நயம்

— விஞ்ஞயாஜி —

வேர்ட்ஸ் வேர்த் (Wordsworth) என்ற ஆங்கில மகாகவி ஞானியை வருணிக்கும் கவிதையொன்று செய்திருக்கிறார். அவர் முன் இருப்பவர் சமூக சேவையில் ஈடுபட்டுள்ள பக்த ஞானியாகும். அவர் தம் அறிவால் மட்டும் ஞானியல்ல; அறிவால் உணர்ந்த ஞானத்தை தம் வாழ்க்கையில் கிரியாம்சையில் நிதர்சனமாய்க் கண்டவர். அவரே பக்தரெனப் படுவர். வேர்ட்ஸ்வேர்த் வானம்பாடி போன்ற (Skylark எனப்படும்) பறவையைக் குறித்துக் கூறுவதாவது:

"A type of the wise that soars, but never roams,
To the kindred points of Heaven and Home"

இது ஒரு ஞானியின் குணசித்திரம். வானம்பாடி எங்கும் வளைய வந்து கொண்டிருந்த போதிலும், அதன் நோக்கு ஒருபுறம் வானத்தின் மீதும், மறுபுறம் அதன் கூட்டின் மீதும் இருந்து வருமாம். வானத்தில் மட்டும் குறியாய் தன் கூட்டைக் கவனியாது அலையுமானால், அது சுற்றித் திரியும் பறவையென்றே சொல்லப்படும்; இவ்வாறின்றி, தன் கூட்டிலேயே கண்ணாய் வானத்தில் கருத்தில்லாது இருப்பின், அது கூட்டிலேயே அடைந்து கிடக்குமேயன்றி மேலே எழும்பிப் பறவாது. ஆனால் அது தன் கூட்டிலும் வானத்திலும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. இதனால் தான் அதை 'அலைகிறது' என்று சொல்லாது, 'வளைய வருகிறது' 'வட்டமிடுகிறது' என்கிறார் கவி. அதை அலைந்து திரியாது தடுப்பது என்ன? அதன் வீடான கூடுதான். அவ்வீடு அதன் உள்ளத்தைக் கவருகிறது. ஏனெனில் அக்கூட்டில் அதன் குஞ்சுகள் இருக்கின்றன. நாமதேவர்,

'உடாலீ பக்ஷிணீ கேலீ அந்தரானா,
சித்த பாளா ஜவளீன் டேவூனியான்'

என்று சொல்லியிருக்கிறார். அதாவது 'தாய்ப்பறவை வானத்தில் பறந்து கொண்டிருந்தபோதிலும் அதன் சித்தம், மனம் அதன் குழந்தைகளிடமே இருந்து வருகிறது'. வேர்ட்ஸ்வேர்த்தின் உபமேயத்தை நாமதேவர் தலைகீழாய்ப் புரட்டி அமைத்திருக்கிறார். வேட்ஸ் வேர்த்தின் பறவைக்கு வானத்தில் கடவுளும், கூட்டில் பரிவாரமும் உள்ளன; ஒரு புறம் மக்கள் சமுதாயப் பணியின் கவர்ச்சியும், மறுபுறம் கடவுள் காட்சியில் ஆவலும் உள்ளன. சுவர்க்கம் மேலே இருப்பதால் மேலே எழ வேண்டியிருக்கிறது; வீடு இருப்பது கீழேயாகையால் கீழே இழிந்து வருதலும் தேவையாயுள்ளது. இவ்வாறு இரண்டிலும் உறுதியாய், கருத்தாய் இருத்தலே அறிவாளிகளின் இலட்சணம்.

கீதையில் 'ஸபுத்திமான் மனுஷ்யேஷு' என்று புத்திமான்களின் இலட்சணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் நாமதேவர் உவமையை மாற்றி, 'பறவை இஷ்டம் போல் வட்டமிடுகையிலும் தன் குஞ்சுகளிடம் கண்ணாயிருப்பதைப் போல, சம்சாரமென்ற வானத்தில் சுற்றி திரிந்து

கொண்டிருந்த போதிலும் என் சித்தம் நீ பிள்ளையைப் போல் துயில் வளர்ந்து கொண்டிருக்கும் அந்த ஆதி வீட்டிலேயே இருந்து வருகிறது' என்கிறார். வேர்ட்ஸ் வேர்த்தின் பகவான் வானத்திலும், சமூகம், சம்சாரம் கூட்டிலுமிருக்க, நாமதேவரது பகவானோ வீட்டிலேயேஇருக்கிறார். நாமதேவரது உவமையில் பறவை வானவெளியெங்கும் சுற்றித் திரிந்த போதிலும் அதன் சித்தம் ஒரே இடத்தில்,பகவானிடத்தில் பதிந்து நிற்கிறது .இந்நிலையை விளக்கும் சிறந்த உவமை காற்றாடியாகும். காற்றாடியின் ஒரு மூலையில் நீண்ட நூல் கட்டப்பட்டிருக்கிறது. அந்நூலைக் கையில் பற்றிக் கொள்கிறோம். நூலின் பிடிப்பு ஒருபுறம் இருந்த போதிலும் காற்றாடியினால் இஷ்டம் போல் எங்கும் சுற்ற முடிகிறது; நூலின் பிடிப்பு கையிலிருப்பதால் காற்றாடி ஒரே இடத்தில் நிலைத்திருக்குமாறும் செய்யப்படுகிறது. ஸ்திரப்ரக்ஞனது வாழ்க்கையின்நடவடிக்கைகளும்இவ்வாறு இருப்பவையே. அவன் கவனம் முழுவதும் ஒரே இடத்தில் நிலைத்து நிற்க, அவன் எங்கும் சுற்றிக் கொண்டிருப்பான் ரிக் வேதத்தில்,

'பிருச்ஞ: பதரம் சிதயந்த மகஷி;!
பாதோ ந பாயும் ஜன்ஸீ உபே அநு!:'

மேகங்களிடையே பறந்து கொண்டிருக்கும் பறவை வானத்திலும் பூமியிலும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. அதற்கு பூமியில் அதன் குடும்பமும் வானத்தில் பரம் பொருளும் உள்ளார்கள். அதன் போக்கு பாலம் போன்றது. பாலம் ஆற்றின் இரு கரைகளையும் தொட்டுக் கொண்டிருப்பது. ஒரு கரையிலேயே, சிறிதும் பற்றற்று, உலகத் தொடர்பு சிறிதுமின்றி உள்ள ஞானிகளும் உண்டு. ஆனால் பாலமோ ஆற்றின் ஒரு கரையில் ஒரு காலும் மறு கரையில் மறு காலுமாகவே இருக்கும்.

(சாம்யயோக சூத்திரம் சர்வோதயப் பிரசுரம்)


## வாய்வு சூரணம்

உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீர்ணம், கைகால்அசதி பிடிப்பு, பசியின்மை, வயிற்று வலி, பித்தமயக்கம், பித்தசூலை, புளியேப்பம், நெஞ்சுக் கருப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4ரூபா 25சதம்

[பத்தியமில்லை]

சம்பு இன்டஸ்ரீஸ் — அரிசிப் பாளையம்சேலம் 2 (S.I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:

ஆத்மஜோதி நிலையம் — நாவலப்பிட்டி

மலாயாவில் கிடைக்குமிடம்:-

ஸ்ரீ கணபதி அன் கொம்பனி (ஜவுளி வியாபாரம்)

66, பெல்பீல்ட் ஸ்ரீட் ஈப்போ

போன் நெ. 3917. த. பெ. 37.


# ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச் சங்கம்

# வெள்ளிவிழா நாமலிகித ஜெபம்

## டிசெம்பர் மாதம் முடிய உள்ள கணக்குவிபரம்

| | |
|---|---|
| சென்ற மாதக் கணக்கு | 26461568 |
| பருத்தித்துறை | 9216 |
| வெள்ளவத்தை | 2160 |
| கட்டுவன் | 38400 |
| திமிலைத்தீவு | 9280 |
| சென் ஜோட்ஜ், தோட்டம் | 10000 |
| மதுகெதறத்தோட்டம் | 3600 |
| கீக்கிணுக்கந்த ,, | 3000 |
| மத்துகம ,, | 4000 |
| பாந்திய தோட்டம் | 3640 |
| கல்வயல் | 1368 |
| டம்பாறைத்தோட்டம் | 3000 |
| நாகெனித் தோட்டம் | 3120 |
| நல்லூர் | 22800 |
| மத்துகம | 91239 |
| இலப்பந்துறப் பட்டினம் | 1176 |
| டெனிஸ்ரன் ,, | 2560 |
| மூதூர் | 25776 |
| இயக்கச்சி | 7920 |
| லேன்ஸ்டவுன் தோட்டம் | 28640 |
| ஸ்ரீகந்துற தோட்டம் | 2588 |
| கந்தர்மடம் | 17901 |
| ஊரெழு | 18105 |
| கொழுமபு | 3200 |
| பென்ரோஸ் கலபொட | 18160 |
| கொட்டாஞ்சேனை | 4444 |
| மஸ்கெலியா | 12369 |
| காவத்தை | 9654 |
| மொத்தம் | 26818884 |

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300


## ஆத்ம ஜோதி நிலைய வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| திருமுறைக்காட்சி | (நா. முத்தையா) | 1—50 |
| கேதார் பத்திரி யாத்திரை | ,, | —75 |
| ஸ்ரீ கதிரைமணி மாலை | (பரமஹம்ச தாசன்) | —50 |
| அறிவுரைக் கதைகள் | (சுவாமி சிவானந்தர்) | —65 |
| ராதையின் காதல் | (சுவாமி சிவானந்தர்) | 1—00 |
| இளங்கோவின் கனவு | (செ. நடராசன்) | 2—25 |
| ஆத்ம நாதம் | (சுத்தானந்த பாரதியார்) | அச்சில் |


## சந்தா நேயர்களுக்கு.

அன்புடையீர்

இன்று 14-ஆம் ஆண்டுச்சோதி மூன்றாவது சுடர் உங்கள் கையில் கிடைக்கின்றது. சந்தா இன்றுவரை அனுப்பாதோர் உடன் அனுப்பிவைத்துச் சோதியை ஆதரிக்க வேண்டுகின்றோம்.

## ஆத்ம ஜோதி நிலையம், - நாவலப்பிட்டி.

(சிலோன்.)

இந்தியாவிலுள்ள அன்பர்கள் வழக்கம்போல்

R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், அரிசிப்பாளையம் சேலம்—2. என்ற விலாசத்திற்கு அனுப்பிவைத்து, அதை எமக்கும் தெரியப்படுத்த வேண்டுகின்றோம்.


## அரிய தமிழ் நூல்கள்!

மகரிஷி சுத்தானந்தர், சுவாமி சித்பவானந்தர், டாக்டர் மு. வ, கி. வா. ஜ. ஆகியவர்களது நூல்களும், மற்றும் அரிய சமய இலக்கிய தமிழ் நூல்களும் கிடைக்குமிடம்:

**சக்தி அன் கோ,**
35, கொத்மலி வீதி,
நாவலப்பிட்டி.


Printed & Published by Mr. N. Muthiah, Athmajothi Nilayam, N'pitiya at Athmajothi Press, Nawalapitiya. (Ceylon) 14-1-62.